

செளந்தர்ராஜன்
ரூ.15/-
ஸ்டார்
நாவல்
மாய
விழிகள்!

# மாய விழிகள்

இந்திரா சௌந்தர்ராஜன்

## 1

ஜனவரி – 1 – 1906

இன்று நான் கொல்லி மலையை அடைந்தேன்.

கல்கத்தாவில் ஒரு கப்பலில் தொடங்கிய என் பயணம் தூத்துக்கடியில் முற்றுப் பெற்றது. அதன் பின் அங்கிருந்து பதினைந்து நாள் பயணம் செய்து எட்டயபுரம், மதுரை, திருச்சி வழியாக சேலத்தை அடைந்தேன்.

நான் என் வாழ்நாளை பெரு விருப்பமுடன் கழிக்க நினைத்த கொல்லிமலை இந்த மாவட்டத்தில்தான் இருக்கிறது.

அங்கே போவது மிகக் கடினம், சரியான பாதையே கிடையாது என்றார்கள். இருந்தாலும் நான் கலங்கவில்லை.

அகத்தியச் சித்தரை மனதில் நினைத்துக் கொண்டே கிளம்பி விட்டேன். என்ன ஆச்சரியம்... அவரே என் எதிரில் தோன்றி கைப்பிடிதது அழைத்துச் சென்றார்.

நாளைக்கு கோரக்கரையும், பாம்பாட்டிச் சித்தரையும் அறிமுகப்படுத்தி வைப்பதாக கூறினார்.

***

## சாம் கிரேட்மேன்

## டயரிக்குறிப்பிலிருந்து...

**ஏ**கப்பட்ட பரபரப்பில் இருந்தது கஸ்தூரி அபார்ட் மெண்ட்ஸ்!

தண்ணீர் லாரி ஒரு பக்கம்... பள்ளிக்கூடம் போகும் குழந்தைக்ள ஒரு பக்கம், காய்கறிக்காரனின் தள்ளு வண்டி இன்னொரு பக்கம்.

நடுவில் அல்லாடிக் கொண்டிருந்தான் ராமு, நெற்றியில் நான்கு வரிக்கு விபூதிப் பட்டை, கழுத்தில் அழுக்குக் கயிற்றில் ஒரு ருத்திராட்சக் கொட்டை, காலர் கிழிந்த ஒரு சாம்பல் நிறச் சட்டை, கசடு ஏறிய ஒரு பிரவுன் கலர் - லுங்கி, லொடக் லொடக் என்று நடக்கையில் சப்தம் போடும் சற்றே அளவில்



பெரிய செருப்பு சகிதம் அவனை யார் பார்த்தாலும் ஒரு சின்ன பரிதாப உணர்ச்சி தோன்றியே தீரும்.

ஒரு கையில் ஸ்கூல் பேக், இன்னொரு கையில் காய்கறிக் கூடை, தோளில் ஒரு பிளாஸ்டிக் தண்ணீர் குடம் என்று ஓடியாடிக் கொண்டிருந்தான். அபார்ட்மெண்ட்டே அவனை விரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தது.

“ராமு இங்க வா... கொஞ்சம் கரண்டு பில் கட்டிட்டுவா...”

“டேய் வரும போது இந்த கோதுமையை கொஞ்சம் உடைச்சிகிட்டு வந்துடுடா...”

-குரங்காக அவனை பிடுங்கி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

மூன்றாவது ஃப்ளோரில் இருக்கிறான் வரதன். பால்கனியில் நின்று கொண்டு ராமு ஓடியாடுவதையும், மற்றவர்கள் அவனை ஊட்டி விளையாடுவதையும் பார்த்துக் கொண்டிருந்தவனுக்குள் ஒரு நினைப்பு.

“டேய் ராமு, இங்க கொஞ்சம் வந்துட்டு போடா...” - என்று புகை பிரியும் வாயுடன் கூறி விட்டு தன் ஃப்ளாட்டுக்குள் நுழைந்து கொண்டான்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ராமுவும் அவன் எதிரில்...

“முதலாளி கூப்பிட்டீங்களா?”

“முதலாளியா... நானா?”

“என்ன முதலாளி நீங்க. என் வரையில இந்த ஃப்ளாட்ல இருக்கற எல்லாரும் எக்கு

முதலாளிங்கதான்."

"ஆமா, நீ ஏன் இப்படி எடுபிடி மாதிரி எல்லாருக்கும் வேலை பார்த்து சாகறே? ஸ்டெடியா ஒரு வேலை பார்த்தா என்ன?"

"எங்கங்க.. இப்படியே பழகிட்டேன்."

"அடப்பாவி.. இப்படியே ஓடிகிட்டிருந்தா ஒரு நாள் அப்படியே உழுந்துடுவடா.."

"என்னங்க பண்றது. என் தலையெழுத்து.."

"தலை எழுத்தாவது கால் எழுத்தாவது... ஆமா உன் அப்பா அம்மால்லாம் எங்க இருக்காங்க?" அந்த கேள்வி முன் ஒரு க்ஷணம் பிரேக்கடித்து நின்ற லாரி ட்ராக்காட்டம் திணறலுடன் நின்றான் ராமு.

"என்னடா.. எங்க இருக்காங்க சொல்லு.."

"உங்களுக்கு என்னைப் பத்தி எதுவும் தெரியாதுங்களா?"

"தெரியாததாலதானே கேக்கறேன்.."

"நான் ஒரு குப்பைத் தொட்டி கேசுங்க.."

"அப்படின்னா..?"

"புதிய பாதை படம் பார்த்தீங்களா... அதுலவர்ற பார்த்திபன் மாதிரிங்க. என்னை பெத்தவ குப்பைத் தொட்டியில போட்டுட்டு போயிட்டா.

எப்படியோ அடிச்சு பிடிச்சு எச்சில் இலையும், பிச்சையுமா நானும் வளர்ந்து ஆளாயிட்டேன்."

-ராமு சொல்ல, வரதன் முகத்தில் திகைப்பு.

"அடப்பாவமே..!" - என்றது உதடு.

"சரிங்க முதலாளி... உங்களுக்கு ஏதாவது



வேலை பாக்கணுமா?"

"ஆமா.. ஒரு கோல்ட் ஃப்ளேக் சிகரெட் பாக்கெட் வாங்கிகிட்டு அப்படியே பிரட்டும் ஜாமும் வாங்கிகிட்டு வர்ரியா?"

"கொடுங்க. அதுக்குதானே இருக்கேன். ஆமா இப்படி தினம் பிரட்டும் ஜாமுமாவே எத்தனை நாளைக்கு பொழுதை ஓட்டுவீங்க. காலா காலத்துல ஒரு கல்யாணத்தை பண்ணிக்க வேண்டியதுதானே?"

"அதுக்கென்ன, ஒரு பொண்ணு இருந்தா சொல்லு பண்ணிக்குவோம்."

"நிஜமா.."

"போடா.. போய் சிகரெட் வாங்கிட்டு வா. நான் உன்னே கூப்பிட்டு விசாரிச்சா நீ என்னை நோண்டுறியா?"

"தப்பா இருந்தா மன்னிச்சுக்குங்க முதலாளி.."

"சரி சரி போய்ட்டுவா. அப்படியே உனக்கு வேண்டியதையும் வாங்கிக்க.."

"டேங்க்ஸ் முதலாளி.."

"என்னது.. என்னது.."

"டேங்க்சன்னேன்.."

"டேங்க்ஸ் இல்லடா.. தேங்க்யூ.."

"தேங்க்யூ.. சரிங்களா?"

"போ.. போ.."

-ராமு போய் விட்டான். நல்ல வாட்ட சாட்டமான உருவம். புகையை கக்கியபடி அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த வரதனுக்குள் புதிது புதிதாக முடிவுகள்.

கதவை தாழிட்டு விட்டு போய் தொலை பேசியைத் தொட்டான்.

யாரையோ கூப்பிட்டான். பின்...

"குட் மார்னிங் பாஸ்..."

"......"

"இங்க ஒரு பய இருக்கான். பேர் ராமு. வாட்ட சாட்டமா இருக்கான். அனாதைப் பய! நம்ம திட்டத்துக்கு நல்லபடியா பயன் படுவான்னு நினைக்கறேன்..."

"......"

"சரிங்க பாஸ்... அவனைப் பயன் படுத்திக்கறதும் படுத்திக்காததும் நம்ம கைல தான் இருக்கு..."

"......"

"சரிங்க பாஸ். நான் பாத்துக்கறேன். அவனை இனி என் கூடவே தங்க வெச்சுக் கறேன். நீங்க கவலைப்படாதீங்க..."

-ரிசிவரை வைத்து விட்டு திரும்பவும் ஒரு சிகரெட், புகைவளையங்கள் அறையையே மூடி மறைக்குமளவு உதட்டிலிருந்து பெருக ஆரம்பித்தது.




**ஜனவரி - 2 - 1906**

கொல்லிமலை... அற்புதமாக இருக் கிறது. சூரியக்கதிர்களால் இந்த மலையின்



தரையைத் தொடவே முடியவில்லை. அவ்வளவு அடர்த்தி. எல்லாவிதமான மரங்களையும் தாவரங் களையும் இங்கு பார்க்க முடிகிறது.

அமெரிக்க அமேஸான் காடு இதன் முன்னால் ஒரு சாதாரண காடுதான்.

மூலிகை என்றால் இந்தியாதான் என்பது உண்மைதான். சில மூலிகைகளை சாப்பிட்டால் பசிக்கவே பசிக்காது என்றார் மிஸ்டர் அகத்தியர். அப்படியே சில மூலிகைகளைப் பறித்தும் கொடுத்து சாப்பிடச் சொன்னார்.

என்ன ஆச்சரியம்?

இன்று முழுவதும் எனக்கு சிறிது கூட பசிக்கவில்லை. உடம்பிலும் புதிய தெம்பு. இன்று அகத்தியரிடம் நான் துறவு மேற் கொள்ள விரும்புகிறேன் என்றேன்.

கொஞ்சம் பொறுமையாக இருங்கள் என்றார் அவர். எதற்காக சொன்னார் என்று தெரியவில்லை.

ஒரு குகையில் நிறைய சித்தர்கள் இருந்தனர். அவர்களை எல்லாம் அறிமுகப் படுத்தி வைத்தார். அவர்களில் ஒருவருக்கு கூட குறைந்த வயதில்லை. ஒருவருககு வயது அறு நூறு. இன்னொருவருக்கு வயது மூன்னூத்தி அறுபது.

காலத்தை ஜெயித்த மனிதர்களாக அவர்களைப் பார்க்கிறேன். மரணத்தை வென்ற அவர்களிடம் நானும் மரணத்தை வென்று வாழ வழிகாட்டுங்கள் என்றேன்.

சரி என்றனர்.

***

## சாம் சிரோட்மேன்
## டயரிக்குறிப்பிலிருந்து

இரவு நேரம்!

வளைந்து வளைந்து மேலேறும் மாடிப் படிக்கு கீழே எல்லா ஃப்ளாட்டு களுக்குமான மீட்டர் போர்டுக்கு அருகில் ஒரு கிழிந்த பாயை விரித்து படுக்கப் போன ராமுவை கை தட்டி கூப்பிட்டான் வரதன்.

"என்ன முதலாளி...?"

"என்ன ராமு, தூங்கப் போறியா?"

"ஆமாங்க... ஏங்க கடை கண்ணிக்கு போய்ட்டு வரணுமா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஆமாம் தினமும் இங்கையா படுக்கறே?"

"ஆமாங்க. ஏன் கேக்கறீங்க..."

"சரி சரி என் கூட மேல வா."

"எதுக்குங்க..."

"வாடான்னா..." - வரதனின் குரலில் அதட்டல் தொணித்தது. ராமுவும் தயங்கிவிட்டு பின் மெல்ல பின் தொடர்ந்தான்.

அறைக்குள் நுழைந்ததும் வரதன் கதவை தாழிட்டு விட்டு எதிரே கட்டிலைக் காட்டி னான். அதில் மெத்தை தலையணை.

"முதலாளி..."

"போய் படுத்து தூங்க. இனி நீ இங்கதான் படுக்கணும்..."

"ஐய்யோ எதுக்குங்க...?"

"இதோ பார். இனி என்ன பார்த்து ஏன் எதுக்குன்னு ஒரு கேள்வி கேட்டுக் கூடாது நீ. நாள் பூரா மாடு மாதிரி வேலை பார்க்கற நீ ராத்திரியிலையாவது நிம்மதியா தூங்குடா, போ... போய் படு. குட்டை நைட்."



வரதன் மின்னல் வேகத்தில் பேசிவிட்டு தன் பெட் ரூமுக்குள் நுழைந்து கதவை தாழிட்டுக் கொண்டான்.

ராமுவுக்கு கொஞ்சம் போல வியப்பு பிடுங்கித் தின்றது. சில நிமிஷம் வரைநின்று நின்று பார்த்தவன் போய் படுக்கையில் விழுந்தான்.

உள்ளேயிருந்து ஜன்னலின் இடுக்கு வழியாக வரதனும் பார்த்துக் கொண்டிருந்தான்.

படுக்கையில் விழுந்த ராமுவுக்குள் ஏகத்துக்கும் பரவசம்.

படுத்துத் தூங்குவது என்பது இத்தனை சுகமான ஒரு அனுபவமா? கேள்வி பிறந்தது மனது பதில் தெரியாதபடி மிதந்தது.

சில நொடிகள்தான்...

அலுப்புக்கு அள்ளிக் கொண்டு போயிற்று உறக்கம். குறட்டை கூரையை பிய்க்க ஆரம்பித்து விட்டது.

அதைப் பார்க்கும் வரதன் முகத்தில் ஒரு குரூரச் சிரிப்பு!

***

விடிந்து விட்டது.

மெத்தை சுகம் ராமுவை கட்டிப் போட்டிருந்தது. வரதனோ எழுந்து காபி

போட்டுக் கொண்ருந்தான். தான்போட்ட காபியில் ஞாபகமாக ஒரு மாத்திரையை போட்டு விட்டு ராமுவை எழுப்பி அவன் எதிரில் நீட்டினான்.

“ஐயோ என்ன முதலாளி நீங்க...” - பதறிப் போனான் ராமு.

“டேய் சாப்பிட்றான்னா...” - வரதனிடம் அதட்டல். அதன் பின் எவ்வளவு மறுத்தும் பலனில்லை. காபி சாப்பிட்ட பிறகுதான் வரதன் விட்டான்.

“நீ என் தம்பி மாதிரி... எனக்கு ஒரு தம்பி இருந்தான். உன்னை மாதிரியே இருப்பான். அநியாயாமா ஒரு ஆக்சிடெண்ட்டுல செத்துப் போயிட்டான். இப்ப உன்னைப் பாக்கும் போது எனக்குள்ள அவன் ஞாபகம்தான்...”

வரதன் லேசாக கண்களை... கசக்கினான். ராமுவுக்கு அப்பொழுதுதான் தன்னிடமும் ஒரு இதயம் இருப்பது தெரிய வந்து அதில் ஈரக் கசிவையும் பார்த்தான். மிக இதமாக இருந்தது.

“முதலாளி உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு.”

“சரி சரி... போய் வேலையைப் பாரு. மறக்காம மதியம் சாப்பிட வந்துடு. இனி சாப்பாடு தூக்கம் எல்லாம் உனக்கு இங்கதான்.”

“எதுக்குங்க...?”

“டேய்... நீ இனிமே ஒரு வார்த்தை பேசக்கூடாது.” - வரதன் அதட்டவும் அதன் பின் ராமு ஒரு வார்த்தை பேசவில்லை.

“சரிங்க... என்றபடி ஓடினான். வரதன் மீசையை நீவிக் கொண்டான்.



“நாலு நாள்தான்... நாலே நாள்தான்” - ன்று மட்டும் சொல்லிக் கொண்டான்.

***

ஆறாவது மாடிதான் கஸ்தூரி பார்ட்மெண்ட்டின் உச்சபட்சமாடி. அதில் டைசி அறையில் ஒரு கைதி போல் அடைந்து டப்பவர் கருப்பசாமி தாத்தா.

பெயரில்தான் கருப்பு இருக்கிறது. ஆனால் ார்த்தால் காஞ்சிப் பெரியவரைப் போல் ருப்பார். அந்த நாளில் நேதாஜியின் படையில் ணியாற்றியவராம்.

இப்போதை அரசியலில் உடன்பாடு ல்லாதவர். காலம் கெட்டுப் போய் அழிவை நாக்கி போய்க் கொண்டிருப்பதாக புலம்பு ார்.

ஒரு விசேஷம்.

இன்றைக்கும் தன் கோவணத் துணியில் ருந்து கோடி வேட்டி வரை தானே துவைத்து பாட்டுக் கொள்பவர். ராமுவைப் பார்த்தால் ட்டும் கொஞ்சம் நெக்குருகிப் போவார்.

அவன் அவருக்காக ஏதாவது கொண்டு ந்தால் “போடாடேய் போடா... எனக்கு ன்னை பார்த்துக்கத் தெரியும்” - என்று த்தரித்து அனுப்பி விடுவார்.

வெள்ளிக்கிழமையானால் குழந்தை ளுக்கு மந்திரிப்பார். காய்ச்சல், குளிர், தேள் டி, பாம்புக்கடி என்று எல்லாவற்றுக்கும் ந்திரிப்புதான். மகா பெரிய ஆச்சரியம். அந்த ந்திரிப்பில் அவைகள் விட்டுப்போய் விடுவது ான். இதனால் வெள்ளிக்கிழமையில் அபார்ட்

மெண்ட் ஃப்ளாட் முன்பு கூட்டம் அ
மோதும்.

வரதன் வீட்டிலிருந்து வெளியே வந்
ராமுவுக்கு இந்த கூட்டத்தை பார்த்த பிறகுதா
தெரிந்தது அன்று வெள்ளிக்கிழமை என்று...

"எலேய் ராமு எங்கடா போயிட்டே
ஏண்டா காலைல பால் வாங்கிட்டு வரலை..."

"டேய் எங்க என் பேப்பர்...?"

"ஏண்டா பாவி... காலைல மங்கள
வாக்கிங் போகும் போது துணைக்கு போ
ணும்னு சொல்லியிருந்தேன்ல..."

பக்கம் பக்கமாக குரல்கள் வந்
மோதிற்று. ராமுவும் வழிசல் சிரிப்போ
அவர்களை சமாளிக்க ஆரம்பித்தான்.

"அது வந்து... வரதண்ணே வீட்லை
படுத்துகிட்டேன். இனிமே ஐய்யாவிக்
அங்கதான் படுக்கை. அண்ணனுக்கு நான் தம்
மாதிரியாம்!"

"எப்ப இருந்துடா இந்த புதுப்பாசம்?"

"ஐய்ய... என்ன கிண்டலா? சரி உங்களுக்
என்ன வாங்கிட்டு வரணும். கமான் கமான்
சொல்லுங்க..."

"டேய் பாத்துடா... கவுத்துடப்போறாங்க
- என்று பதிலுக்கு அவர்களும் வேலை சொல்ல
ராமுவும் காரியத்தில் இறங்க, கருப்பசாமி
தாத்தா மட்டும் ஃப்ளாட்டுக்கு வெளியே உட்
கார்ந்தபடி முறைத்து பார்த்துக் கொண்
டிருந்தார்.

"என்ன தாத்தா... என்ன பாக்கறீங்க
மந்திரிக்கற வேலையெல்லாம் நல்லா நட



த்தா... கூட்டம் அதிமாகிகிட்டே போகுது."

"எலேய் இங்க வாடா..." தாத்தா கூப்பிட்டார்.

ஓடினான்.

"என்ன தாத்தா...?"

"உக்காரு, உனக்கும் மந்திரிக்கறேன்."

"ஐய்ய எனக்கெதுக்கு...?"

"என்னமோ தெரியல உன்னை மந்திரின்னு உள் மனசு சொல்லுதுடா..."

"சொல்லும்... சொல்லும்... நீங்க விளையாட நான் தான் கிடைச்சேனா?"

ராமு கத்திக் கொண்டே அங்கருந்து ஓடத் தொடங்கினான்.

தாத்தா பார்த்துக் கொண்டே இருந்தார். வரதனும் தன் பிளாட்டில் இருந்து பார்த்துக கொண்டிருந்தான்.

"ஆமா இந்த கெழவனுக்கு வேற வேலை இல்லையா மத்திரிக்கறேன், கயிறு கட்றேன்னு கிட்டு..."

பக்கத்து பிளாட் பலராமனிடம் கேட்க, பலராமன் சீரியஸாக பதில் சொன்னார்.

"மிஸ்டர் வரதன், கருப்பசாமி தாத்தாவை சாதாரணமா எடை போட்டுடாதீங்க. அவர் ஒரு புரிஞ்சுக்க முடியாத புதிர்..."

"அப்படியா... எந்த விதத்துல?"

"அதை சொல்லி புரிய வைக்க முடியாது. பழகிப் பாருங்க தெரியும்."

"ஆமாம் இதுக்காக அந்த கிழவர் கூட பழக எனக்கென்ன வேலை வெட்டி இல்

லைன்னு நினைச்சுட்டீங்களா?"

"நோ நோ... நான் அப்படி சொல்லல... அவரைப் புரிஞ்சுக்கறது அவ்வளவு கஷ்டம்... சொன்னேன். என் வரையில அவர் கிட்ட நா... சில விசேஷ சக்திகளை பார்க்கறேன்."

"விசேஷ சக்தியா... என்ன பலராம... சொல்றீங்க?"

"ஆமாம்... சொன்னா புரியாது. அ... பவிச்சாதான் தெரியும். ஒருநாள் ஸ்கூட்ட... எடுத்துகிட்டு இருந்தேன். தாத்தா பாத்துட்... நடந்து போப்பான்னார். நான் சிரிச்சுக்கிட்... ஸ்கூட்டரை எடுத்துகிட்டு போனேன். வழியி... ஆக்சிடெண்ட் ஆகி, நான் எழுந்திரி... அப்புறம் ஆறு மாசம் ஆச்சு..."

"கேஷுவலா சொன்னதை நீங்கவ... முடிச்சு போட்டு பாத்துக்கறீங்கன்னு நினை... கிறேன்."

வரதன் பலராமனிடம் பதிலுக்கு பதி... என்று பேசிக் கொண்டே போக தாத்... பார்த்துக் கொண்டே இருந்தார்!

# 3

## ஜனவரி – 3 – 1906

"நான் கொல்லிமலைக்கு வந்து இங்கே இருக்கும் சித்த புருஷர்களோடு பழக ஆரம்பித்து நாட்கள் ஓடிக் கொண்டே



இருக்கின்றன. இவர்களில் சிலர் சதா தியானம் யோகம் என்று இருக்கின்றனர். சிலர் ஓவியம் வரைகின்றனர். சிலர் மருந்து தயாரிக்கின்றனர். அது காயகல்பம் என்று நினைக்கிறேன்

நான் அவ்வளவையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன். யாரிடமாவது போய் இது என்ன என்று நான் கேட்டால் பதிலுக்கு சிரிப்பு தான் எனக்கு விடையாக கிடைக்கிறது. எதுவுமே சொல்ல மாட்டேன் என்கிறார்கள்.

என் பொறுமையை சோதிக்கிறார்கள் என்று தெரிந்தது. ஒன்று உறுதி. சீடனுக்கு அழகு காத்திருத்தல். குரு எதைச் சொன்னாலும் செய்தல். நான் இந்த இரண்டிலும் தவறு செய்யவில்லை.

எந்த வகையிலும் நான் பொறுமையை இழந்து விடமாட்டேன்.

***

## சாம் கிரேட்மேன் டயரிக்குறிப்பிலிருந்து

மணி காலை பதினொன்று இருககும்

அபார்ட்மெண்ட்டே டி.வி. முனனால் முடங்கி விட்டது.

ராமுவுக்கும் விடிந்தது முதல் ஓடியாடியதில் களைப்பாக இருந்தது.

மாடிப்படிக்கு கீழ் ஒரு பெரிய வால் போஸ்டரை விரித்து படுக்க ஆரம்பித்தான்.

நிச்சயம் மூணு மணி வரை யாரும் கூப்பி
மாட்டார்கள். அதன்பின் ஒவ்வொரு வீடாக
போய் தலையைக் காட்டினால் போது
சமைத்ததில் மிச்சம் மீதியாக எது இருக்கிறதே
அதைக் கொண்டு வந்து அவனது அலுமினிய
தட்டில் போடுவார்கள். சில நேரங்களில் மு
வயிறு நிரம்பும் அளவு கிடைக்கும். பல நேர
களில் அரை வயிறு... முக்கால் வயிறுதான்.
இன்றைக்கு எவ்வளவு கிடைக்கிறதோ?

கேள்வியோடும் அப்பொழுதே வயிற்றி
எரியத் தொடங்கி விட்ட பசியோடும் படு
தான். அலுப்பில் கைகால்களில் வ
கொஞ்சியது. படுத்த நிலையில் அப்படியே
சோம்பல் முறித்தான். ஒரு கொட்டா
அவனைத் தூக்கத்திற்குள் இழுக்கப் பார்த்
போது-

"டேய் ராமு.."

-கூப்பிட்டது வரதன்தான்!

"அண்ணே.."

"என்னடா அண்ணே... நொண்ணே
வாடா இங்க.." - வரதனின் குரலில் உரிமையு
கோபமும் தொனித்தது. படுத்த வேகத்தி
எழுந்து வரதன் பின்னால் சென்றால். வரத
தன் ஃப்ளாட் வீட்டுக்குள் நுழைந்து கொண்
ராமுவையும் உள்ளே அழைத்தான். கதவை
தாளிட்டான். உள்ளே டைனிங் டேபிள் மே
கறி பிரியாணியில் இருந்து வறுத்த மீன் வ
கபகபவென்று மணத்தபடி கிடந்தது.

"போடா.. போய் சாப்பிடுடா."

"அண்ணே.."

"போடா.. உனக்கு தான்டா?"



ராமுவுக்குள் ஆச்சரியம் அலையடிக்க ஆரம்பித்தது.

"திருதிருன்னு முழிக்காம போய் சாப்பிடுன்னு சொல்றேன்ல."

"அண்ணே.. பரவால்லண்ணே.."

"சாப்பிட்றான்னா?"

அதற்கு மேல் அவனால் சும்மா இருக்க முடியவில்லை. டைனிங் டேபிளை நெருங்கி பிரியாணி பாத்திரத்தை கையில் எடுத்துக் கொண்டு தரையில் உக்கார்ந்து சாப்பிடத் தொடங்கினான்.

"மேல ஏறி நல்லா வசதியா உட்கார்ந்துகிட்டு சாப்பிடு", மீண்டும் வசதனிடம் அதட்டல். சரியென்று நாற்காலியில் அமர்ந்தான். சாப்பிட ஆரம்பித்தான். முனியாண்டி விலாஸ் ஐட்டம். ருசியில் மனசு சிலிர்த்துப் போனது. பசிக்கு அமிர்தப் பாத்திரமே அகப்பட்ட மாதிரி இருந்தது. ஒரு பிடி பிடித்து விட்டு ஏப்பத்தோடுதான் நிமிர்ந்தான். பார்த்துக் கொண்டே இருந்தான் வரதன். ராமுவின் தாடையெல்லாம் பிரியாணிப் பருக்கைகள்.

"எப்படி இருக்கு?"

"சூப்பர்ணே.."

"ராத்திரியும் சாப்பிட வந்துடு."

"அண்ணே.."

"என்ன அண்ணே, நொண்ணே - நீ என் தம்பி மாதிரின்னு சொன்னேன்ல."

"ஆமாண்ணே.."

"நான் உன் அண்ணவா இல்லையா?"

"அண்ணன்லாம் இல்லண்ணே..." - ராமு திடீரென்று அதிர்ச்சியளித்தான். வரதனுக்கும் பகீர் என்றது.

"என்னடா சொல்றே... நான் உன் அண்ணன் இல்லையா?"

"இல்லண்ணே... நீங்க அதுக்கும் மேல. என் தெய்வம்"

"அடப்பாவி... ஒரு நிமிஷம் என்னை என்னவோ ஏதோன்னு நினைக்க வெச்சுட்டேடா."

"சரிண்ணே... வாங்க இப்படி உக்காருங்க."

"எதுக்குடா..."

"அட உக்காருங்கண்ணேன்னா..." - ராமுவுக்கு கூட அன்பாக அதட்ட வந்தது. வரதனும் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்தான். நீண்டு கிடக்கும் கால்களை அருகில் அமர்ந்து கொண்டு அமுக்க ஆரம்பித்தான் ராமு.

"இதுக்குத்தானா?"

"ஆமாண்ணே... முன்னையெல்லாம் கால் அமுக்கச் சொல்வீங்க. இப்ப ரொம்ப கெட்டுப் போயிட்டீங்க." - செல்லமாக கோபித்துக் கொண்டான். பேச்சோடு பேச்சாக தனது உருக்கு கைகளால் அவனது வலுவான கால்களை இதமாய் பிடித்து விட்டான்.

"போதும்... போதும்... இனி நீ இந்த மாதிரி வேலையெல்லாம் செய்யக்கூடாது."

"என்னண்ணே சொல்றீங்க. நான் இதை எல்லாம் செய்யாட்டி யார் சோறு போடுவா?"

"அண்ணன் நான் இருக்கேன்ல...?"



ராமுவுக்கு கண்கள் பனித்து விட்டது.

வரதன் அதைப் பார்த்து மர்மமாய் ஒரு சிரிப்பு சிரித்தான்.

***

கருப்பசாமி தாத்தா வாக்கிங் கிளம்பிக் கொண்டிருந்தார். கறுப்புக் குடையும் கையுமாய் ஃப்ளாட்டை விட்டு வெளியே வந்தவர் எதிரில், வராண்டாவில் நின்று கொண்டு தம்மடித்துக் கொண்டிருந்தான் வரதன். வராண்டா முழுக்க சாம்பிராணி புகை மூட்டம் போட்டதுபோல சிகரெட் புகை.

தாத்தா அதை கையால் விலக்கிக் கொண்டே அவனை முறைத்துப் பார்த்தார்.

"என்ன தாத்தா பாக்கறீங்க?"

"பாக்காம... இப்படி புகை பிடிச்சா உடம்பு என்னத்துக்கு ஆகறது?"

"எனக்கென்ன தாத்தா... நான் நல்லாதான் இருக்கேன். ஆமா எங்க வாக்கிங்கா?"

"நீ தெரிஞ்சுகிட்டு என்ன பண்ணப் போறே. வழியை விடு" -தாத்தாவின் குரலில் கடுமை தொனித்தது. வரதனை அது என்னவோ செய்தது. குபுகுபுவென அவருக்கு வழியை விட்டான். தாண்டிக் கொண்டு நடந்தவர் எதிரில், எதையோ மூடி எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான் ராமு. தாத்தாவை பார்க்கவும் நின்று சிரித்தான்.

"எங்கடா போய்ட்டு வரே...?"

ராமு அசடு வழிந்தான்.

"கைல என்ன...?" - அவர் பார்வை அவனது

கைகளை நோக்கி சென்றது.

"கேக்கறேன்ல...?" - அவர் அதட்டவும் அவன் திறந்து காட்டினான். ஒரு விஸ்கி பாட்டில்!

"யாருக்குடா இது?"

"அண்ணனுக்கு?"

"எவண்டா உனக்கு இங்க அண்ணன்...?"

பதிலுக்கு ராமுவின் பார்வை வரதனை நோக்கிச் சென்றது. தாத்தா அதற்கு மேல் எதுவும் பேசாமல் அவனைக் கூர்ந்து பார்த்தார். நடக்க ஆரம்பித்தார். "இதெல்லாம் எதுவும் நல்லதுக்கா தெரியல..."

கடந்து செல்கையில் அவரிடம் முணுமுணுப்பு. அபார்ட்மெண்ட் மெயின் கேட்டை அவர் தாண்டும் போது கார் ஒன்று உள்ளே நுழைந்தது. தாத்தா யார் அவர்கள் என்கிற மாதிரி ஒரு பார்வை பார்த்துவிட்டு புறப்பட்டு போய் விட்டார். அவர்கள் நேராக வரதனின் ஃப்ளாட்டுக்குதான் வந்தனர். எண்ணி நான்கு பேர். நான்கு பேரும் பார்க்க மிடுக்காக பேண்ட் ஷர்ட், கூலிங் கிளாஸ், கையில் பிரீஃப்கேஸ் என்று படித்த லட்சணங்களோடும் நாகரீக பாதிப்புகளுடனும் இருந்தார்கள்.

"ஹலோ கேப்டன்... வெல்கம்!" - வரதன் வரவேற்று அவர்களை உள்ளே அழைத்துச் சென்றான். ராமு உள்ளே தலையை காட்ட ஆரம்பித்திருந்தான். உள்ளே நுழைபவர்களைப் பார்த்து விளக்குமாற்றுக் கரத்தோடு நிமிர்ந்தான்.

"நான் சொல்லலை... இவன்தான்!" - வரதன் ராமுவை சுட்டிக் காட்டினான்.



அவர்களில் ஒருவன் பார்வை அதிகமாகவே ராமுவை எடை போட்டது. ராமு திருதிருவென்று அவர்களைப் பார்த்தான்.

"குட்... வெரிகுட்!" - பார்த்தவன் உதடு கமெண்ட் அடித்தது.

"என்ன சொன்னாலும் செய்வான். நான்னா உசிரு! இல்ல ராமு?" - வரதன் இடையில் கேள்வி ஒன்றைத் தூக்கிப் போட்டு ராமுவைப் பார்க்க, ராமுவும் கோவில் மாடு போல தலையை ஆட்டி ஆமோதித்தான்.

"குட்... வெரி வெரி குட்..."

"எல்லாரும் உக்காருங்க... இப்பதான் உங்களுக்காக ட்ரிங்க்ஸ் வாங்கிட்டு வரச் சொன்னேன். சாப்பிட்றீங்களா?"

"நோ வரதன்... இது பிசினஸ் டைம்."

அந்த நான்குபேரில் ஒருவன் அழுத்தமாக சொன்னான். ராமுவுக்கு அவர்கள் பேச்சே புரியவில்லை. அவர்களில் ஒருவன் கூலிங் கிளாஸ் போட்டிருந்தான். அதை கழட்டி விட்டு ராமுவை பார்த்து அருகில் அழைத்தான்.

சரியான பூனைக்கண்கள்!

விழியின் வெண்படலம் முழுக்க ரத்தச் சிவப்பில் மிரட்டியது.

அப்படி ஒரு கண்ணை ராமு தன் வாழ்நாளில் பார்த்ததில்லை. பயமாகக் கூட இருந்தது.

"மிஸ்டர் வரதன் இவனை காபி வாங்கிட்டு வரச் சொல்றீங்களா?" - சட்டென்று சொன்ன அந்த கூலிங்கிளாஸ் மனிதனை வரதன் ஆமோதித்தான்.

"ராமு... போய் நாலு காபி வாங்கிகிட்டு வா..."

ராமுவும் வெளியேறக் காலெடுத்தான். "நில்லு..." கூலிங்கிளாஸ் மனிதன் தடுத்தான். ராமுவும் நின்றான்.

"இங்க வா..." - அழைத்தான். ராமுவும் தயங்கியபடி அருகில் சென்றான்.

"என்னை இதுக்கு முந்தி பாத்துருக்கியா?"

"இல்ல... இல்ல... இல்லவே இல்ல!"

"பயப்படாதே, உன் பேர் என்ன?"

"ரா... ராமு!"

"குட். நல்ல பேர். நீ ரொம்ப நல்லவன்னு வரதன் சொன்னான். உன்னை நான் பெரிய ஆளா ஆக்கப் போறேன்..."

"......"

"என்ன பாக்கறே? நீ இனிமே வேலைக்காரன் இல்லை. பெரிய்ய ஆள். நீ சொன்னா மத்தவங்க வேலை செய்வாங்க. அந்த அளவுக்கு உன்னை மாத்தப் போறேன்..."

"அது... அது... எப்படிங்க முடியும்?"

"இப்படி கேள்வி கேட்கறவங்களையே எனக்கு பிடிக்காது. மனுஷன் மனசு வைச்சா எல்லாம் முடியும். எதுவும் முடியும்."

"நீங்க என்னென்னவோ சொல்றீங்க?"

"நான் உனக்கு நல்லதைத்தான் சொல்றேன். இப்ப இந்த வரதன் உனக்கு என்ன சொன்னான்?"

"கா... க்ஃபி வாங்கிட்டு வரச் சொன்னார்..."

"காபி வாங்கிகிட்டு வரச் சொன்னானா...



சரி அங்க எங்க பாக்கறே? என்னைப் பார். என்னையே பார்..."

"பா... பயமா இருக்கு."

"பயப்படாதே. நான் உனக்கு உதவப் போறவன். உன்னை பெரிய ஆளாக்கப் போறவன். இனிமே நீ எதுக்கும் பயப்படக் கூடாது. பயப்படவே கூடாது..."

"ச... ச... சரிங்க!"

"வார்த்தைல சொன்னா பத்தாது. மனசுல இருந்து பயத்தை தூக்கி எறி. மனுஷன் மனசு வெச்சா என்னவேணா பண்ண முடியும். பாக்கறியா?"

-கேட்டுவிட்டு அவன் அருகில் டி.வி. மேல் வைத்திருந்த ஒரு அழகிய பொம்மையை பார்த்தான்.

"இப்ப பார் அந்த பொம்மை கீழ விழும்!"

-சொன்ன மறுநொடி பொம்மை மேலிருந்து பொத்தென்று கீழே விழுந்தது. விழுந்த வேகத்தில் சுக்கு நூறாக நொறுங்கிப் போனது.

"பாத்தியா... மனுஷன் மனசு வெச்சா என்ன வேணும்னா பண்ணலாம். இப்ப நீ கூட பண்ணப் போறே?"

-அந்த கூலிங்கிளாஸ் பார்ட்டி பேசுவதும் சொல்வதும் வரதனைக் கூட குடாய்ந்தது.

"ராமு இப்ப நீ ராமு இல்ல வரதன்... வரதன்... வரதன்..."

"........"

"இப்ப நான் உன்னையாருன்னு சொன்னேன்?"

"வ.. வரதன்.."

"வ... வரதன் இல்ல. வரதன். பிரிஸ்க்கா நல்லா பலமா சொல்லு பார்ப்போம். நான் வரதன்னு.."

"நான் வரதன்..!"

"எங்க சத்தம் போட்டுச் சொல்லு பார்ப்போம்."

"நா.. ன்.. வ.. ர.. த.. ன்..!"

-ராமு கூரை அதிருமளவு கத்த சப்தம் அபார்ட்மெண்ட் முழுக்க எதிரொலித்தது. அருகில் நின்று கொண்டிருந்த வரதனுக்கு ஆட்டம் காண ஆரம்பித்தது.

-கூலிங்கிளாஸ் மனிதனின் பார்வை சரேலென்று அவன் பக்கத் திரும்பியது.

"என்ன வரதன்... இங்க நடக்கறதை எல்லாம் பார்த்தா ஒரே குழப்பமா இருக்கா.."

"அது.. அது.. ஆமாம் மிஸ்டர் சிரஞ்சீவி!"

"நான் சிரஞ்ஜீவிதான்... என் பேர் சிரஞ்சீவிதான். ஆனா இப்போ நீங்கதான் வரதன் கிடையாது. அதாவது நீங்க ராமு.."

"நா.. நான் ராமுவா?"

"ஆமாம்.. எங்க என் கண்ணைப் பாருங்க. அங்க அவனை என்ன பார்க்கறீங்க... என்னைப் பாருங்க."

"சிரஞ்சீவி சார் என்ன இதெல்லாம்?"

"உஷ்! இப்ப இங்க ஒரு பரீட்சை நடந்துகிட்டு இருக்குது. ப்ளீஸ் கோ ஆப்பரேட் வித் மீ.. கமான் சீ மை ஐஸ். என் கண்களை நல்லா பாருங்க."



"பாக்கறேன் மிஸ்டர் சிரஞ்சீவி."

"குட்.. இப்ப நீங்க ராமு. ராமு.. ராமு.."

"ஆமாம்... நான் இப்ப ராமு... ராமுவே தான்.."

-வரதன் தன்னை ராமு என்று ஒப்புதல் கொடுக்க சிரஞ்சீவி என்று அவரால் அழைக்கப்பட்ட அந்த கூலிங்கிளாஸ் பார்ட்டி தன்னை வரதன் என்று சொல்லிக் கொண்டு நிற்கும் ராமு பக்கம் திரும்பினான்.

"மிஸ்டர் வரதன்... நாங்க திரும்பி வர்ற வரைல நீங்க இந்த ராமுவை வேலை வாங்க நீங்க. எந்த நிலையிலயும் நீங்க ராமு கிடையாது வரதன்தான். சரியா?"

"யெஸ் மிஸ்டர் சிரஞ்சீவி."

"வெரிகுட்... எங்க இப்போ அவரைப் போய் காபி வாங்கிகிட்டு வரச் சொல்லுங்க பார்ப்போம்."

-கூலிங்கிளாஸ் சிரஞ்சீவி ராமுவை இனி வரதன் நீதான் என்று சொல்லி கட்டளையிடச் சொல்ல ராமுவும் வரதன் பக்கம் திரும்பி "மிஸ்டர் ராமு போய் காபி வாங்கிட்டு வாங்க.." என்றான். அடுத்த நொடி லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டு வரதன் வெளியேறத் தொடங்கினான்.

***

டீக்கடையில் "நாலு காபி" என்ற வரதனைப் பார்த்த கடைக்காரர் ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"என்ன வரதண்ணே காபி வாங்க நீங்களே வந்துட்டீங்க. அந்த வெறும்பய ராமு என்ன

வானான்..?" - கேட்டார்.

"நான்தான்யா ராமு.. காபியை கொடுய்யா.."

"என்னது.. நீங்க ராமுவா? என்னண்ணே ஆச்சு உங்களுக்கு?"

-"டேய் காபியை போட்டு கொடுடா. அப்புறமா கேள்வி கேட்கலாம். நான் வரதன இல்லை ராமுன்னு சொல்றேன்ல."

-வரதன் குரலில் அதட்டல் தூள் பறந்தது. டீக்கடைக்காரன் அதன் பிறகு எதுவும் பேசவில்லை. காபியை போட்டு கம்பிச் சிட்டத்தில் வைத்துக் கொடுத்தான்.

வரதன் கிளம்பிப் போன பிறகு தலையில் அடித்துக் கொண்டான்.

"இந்த ஆளுக்கு என்ன ஆச்சு?"

***

அபார்ட்மெண்ட்டே காபி கிளாஸோடு வரதன் மாடி ஏறுவதைப் பார்த்து ஆச்சரியப் பட்டது. அறைக்குள் நுழைந்த வரதன் காபியை பணிவாக எடுத்து நான்கு பேரிடமும் நீட்டினான்.

ராமு ஆச்சரியப்படும்படி அவன் பயன் படுத்தும் சிகரெட்டை எடுத்து பற்ற வைத்திருந் தான். துளியும் பயம் நடுக்கம் எதுவுமின்றி புகையை பொழிந்து தள்ளிக் கொண்டிருந் தான்.

அதைப் பார்த்த வரதனுக்கு துளியும் கோபமோ வருத்தமோ எழவில்லை.

"வரதண்ணே அடுத்து நான் என்ன செய்யணும்" என்றுதான் கேட்டான்.



காபியை குடித்துக் கொண்டிருந்த நான்கு பேரும் அதைக் கேட்டு க்ளுக்கென்று சிரித்து விட்டனர்.

குறிப்பாக கூலிங்கிளாஸ் மனிதன் வரதனைப் பார்த்து "ராமு இனிமே நீ ராமு இல்லை. வரதன்.. எங்க என் கண்ணைப் பாரு.. நல்லா பாரு... நீ வரதன்... நீ வரதனேதான்... ராமுவா... மாறின நீ இப்ப வரதனாயிட்டே.... வரதனாயிட்டே என்று அவனை பழையபடி மாற்றினர்.

வரதனும் தலையை சிலிர்ப்பிக் கொண் டான்.

"என்ன சிரஞ்சீவி என்கிட்டையே உங்க வேலையை காட்டிட்டீங்களே..." என்றான். பதிலுக்கு அவர்கள் சிரித்தனர். வரதன் பார்வை புகைபிடித்தபடி நின்று கொண்டிருந்த ராமு பக்கம் திரும்பியது.

"அடப்பாவி... தம் வேற அடிக்க ஆரம்பிச்சிட்டியா" -என்று கோபத்தில் விழப் பார்த்த வரதனை நான்கு பேரும் ஒருசேரத் தடுத்தனர்.

"வரதன்.. அவசரப்படாதீங்க. அவன் இப்ப உருவத்துலதான் ராமு. உள்ளத்தால அவன் வரதன். எங்க கண் வசியத்துக்கு அவனும் நீங்களும் எந்த அளவுக்கு பயன்படுவீங்கன்னு ஒரு பரிசோதனை செய்தோம். சூப்பர்.. இரண்டு பேருமே நல்லாவே ஒர்க் அவுட் ஆகியிருக் கிங்க.."

"அப்படின்னா அவன் வரதனா.. அதாவது என்னை மாதிரிதான் நடந்துக்குவானா?"

"இப்ப அவனை திரும்ப ராமுவ்ர்க்கிரு

வோம். இன்னிக்கு ராத்திரி எட்டு மணிக்கு அவனுக்கு முதல் அசைன்மெண்ட். அதை அவன் சக்ஸஸ் ஃபுல்லா முடிச்சிட்டா தொட்டுத் தொட்டு போய்கிட்டே இருக்கலாம்."

"அப்ப சரியான ஆள்தான்னு சொல்லுங்க."

"இப்போதைக்கு எழுபத்தைந்து மார்க் தான். ராத்திரி எட்டு மணிக்கு பிறகுதான் தெரியும். நூறு மார்க் வாங்குவானா மாட்டானான்னு..."

-என்று அந்த சிரஞ்சீவி ராமுவை வரதனில் இருந்து மீட்க ஆரம்பித்தான்.

வரதன் மகிழ்ச்சியோடு அதை ரசித்துப் பார்த்தான். ராமுவும் சில நிமிடங்களில் ராமுவாகி கைவசம் உள்ள சிகரெட்டை தூக்கி எறிந்தான். பதறிப் போய் கைகளைக் கட்டிக் கொண்டு 'அண்ணே அண்ணே' என்று ஏதோ பெரிய தவறு செய்து விட்டவனைப் போல வரதன் காலடியில் வந்து மண்டியிட்டான்.

நான்கு பேரும் அதைப் பார்த்து ரசித்துச் சிரித்தனர். சிரித்தபடியே வெளியேறினர்!



## ஜூலை 4 1996

'எனது பொறுமை, காத்திருப்புக்கு பயன் கிடைத்தது. ஒருநாள் ஒருசித்த புருஷர் என்னை அழைத்து தனக்கு ஒத்தாசை



புரியச் சொன்னார். அவருககு நான் சில மூலிகைகளை அரைத்து சாறு பிழிந்து தர வேண்டும். அந்த சாற்றினை ஒரு மண் கலயத்தில் விட்டு அதோடு அவர் பல பொருட்களை கலந்தார். பின் அதை அப்படியே சுண்டக்காய்ச்சினார். இறுதியாக அது கெட்டியாக மெழுகு போல மாறியது. அதை எடுத்து ஒரு கோலிக்குண்டு அளவுக்கு உருட்டி பல உருண்டைகளை பிடித்தார். அவைகளை அதன்பின் ஒவ்வொருவருக்கும் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்.

இதைச் சாப்பிட்டால் கண் பார்வை சம்பந்தமான பலவீனங்கள் அகலும். பார்வை கூர்மையடையும் என்றார்.

***

## சாம் கிரேட்மேன் டயரிக்குறிப்பிலிருந்து

அபார்ட்மெண்ட்டுககு வெளியில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வயதான எழுபதை எட்டிய கிழவர்கள் ஒரு பத்து, பதினைந்து பேராவது தேறுவார்கள். அவ்வளவு பேரும் பக்கத்தில் இருக்கும் கோவில் மண்டபத்தில் போய் உட்கார்ந்து கொண்டு ஊர்க்கதை பேசி விட்டுத்தான் திரும்பி வருவார்கள்.

சில ப்ளஸ்டூக்கள் ரஞ்சனி டீச்சர் வீட்டில் ஒன்று கூடி ஜாயின்ட் ஸ்டடி செய்வார்கள்.

பாட்டிகள் காலை நீட்டிக் கொண்டு

வராண்டாவில், வந்து உட்கார்ந்து விடுவார்கள். அப்பொழுதும் ராமுவுக்கு ஏதாவது வேலை இருக்கும்.

ரவிக்கை தைத்திருந்தால் வாங்கி வருவது, மளிகைக்கடைக்கு போய் விட்டு வருவது. நல்ல தண்ணீர் சுமந்து வருவது என்று வீட்டுக்கு ஒருவேலை...

ராமுவும் அன்று அதற்காக தயாரானான்.

பார்த்துக் கொண்டே இருந்த வரதன் தடுத்தான்.

"இனிமே நீ எந்த வேலையையும் யாருக்காவும் செய்யக்கூடாது. ஞாபகம் வெச்சுக்கோ..." - என்று அதட்டினான். ராமு நெளிந்தான்.

"உனக்கு நான் இருக்கேண்டா. மடப் பயலே"

"அது இல்லண்ணே... இத்தனை நாளா எல்லாருக்கும் ஓடியாடி உபகாரமா வேலை செய்துட்டு திடீர்னு நான் முடியாதுன்னா தப்பா எடுத்துக்க மாட்டாங்களா?"

"எடுத்தா எடுத்துக்கட்டும். அவங்கள்ளாம் இதயம் இல்லாதவங்கடா. நான் அப்படி இல்லை. நீ இனி என் தம்பி. இந்தா போய் ஒரு காபி சாப்பிட்டுட்டு எனக்கும் ஒரு காபி வாங்கிட்டு வா..."

-வரதன் அவன் கையில் ஒரு பத்து ரூபாயை திணித்தான்.

அரை மனதோடு ராமுவும் வெளியில வந்தான்.

"எங்கடா கிளம்பிட்டே... இங்க எவ்வளவு



வேலை இருக்கு தெரியுமா?" -ஒருத்தி கேட்டாள்.

"........"

"என்னடா பாக்கறே. காலைலயே கிருஷ்ண ஜெயந்தி வருது மிஷினுக்கு போய் மாவு உடைச்சுகிட்டு வரணும்னு சொல்லி யிருந்தேன்ல."

"அது வந்துக்கா..."

"எது வந்துடா..?"

"நான் இனிமே..."

"என்னடா உனக்கு..?"

"நான் இனிமே இந்த மாதிரி வேலையெல்லாம் செய்யமாட்டேன்கா, -தட்டுத் தடுமாறி சொல்லி முடித்தான்.

"பொறவு..."

"........"

"அண்ணன் இருக்கார். இனிமே அவர் பார்த்துப்பார்."

"அது யாருடா அண்ணன். உனக்குன்னு திடீர்னு பொறந்து வந்துருக்கறவன்."

"டேய் ராமு..." - பதில் வரதனிடமிருந்து வந்தது.

"அங்க என்னடா வளவளன்னு பேசிகிட்டு நேரமாவுதில்ல!" வரதனில் அதட்டல் அந்த பெண்மணியையும் கட்டிப் போட்டது. வரதனை அவள் ஒரு மாதிரி பார்த்தாள். அந்த இடைவெளியில் ராமுவும் நழுவினான். இதை எல்லோருமே பார்த்துக் கொண்டுதானிருந்தார்கள்.

'என்ன வரதா... ராமுவை உனக்குன்னே

பட்டா போட்டுகிட்டியா?" - என்று பாட்டி மட்டும் சற்று தைரியமாக கேட்டாள்.

"அப்படித்தான் வெச்சுக்கோயேன் பாட்டி..."

-அவனும் சளைக்காமல் பதிலைச் சொன்னான்.

***

இரவு எட்டுமணி.

அந்த நான்கு பேரின் காரும் அபார்ட்மெண்ட் வாசலில் வந்து தேங்கியது. அவர்களும் இறங்கி வரதன் ஃப்ளாட்டுக்குள் நுழைந்தனர்.

"வாங்க... வாங்க..." தடபுடல் வரவேற்பு வரதனிடம். அவர்களில் சிரஞ்ஜீவி கையில் ஒரு பிரீஃப்கேஸ் இருந்தது. அதைத் தூக்கி டீப்பாயின் மேல் வைத்த சிரஞ்ஜீவி நிமிர்ந்து ராமு எங்கே என்று பார்த்தான்.

"பய என் துணியை எல்லாம் பாத்ரூம்ல தோச்சு போட்டு கிட்டிருக்கான்..."

"அவன்கிட்ட இப்படித்தான் சில்லரைத்தனமா வேலை வாங்கறதா?"

-கேள்வியில் நக்கல் எதிரொலித்தது.

"அதான் பெரிய பெரிய விஷயத்துக்கு இனி பயன்படுத்திக்கப்போறோமே..." - சமாளித்தான் வரதன். சிரித்தான் சிரஞ்ஜீவி.

"கூப்பிடு அவனை..."

-ராமுவும் வந்து நின்றான். ஈர லுங்கி, வியர்வைக் கழுத்து, கலைந்த தலை.

"வரதா பயலை குளிச்சுட்டு வரச் சொல்..."



"ஓ.கே. சிரஞ்ஜீவி. ராமு போய் குளிச்சுட்டு வா..."

"அண்ணே..."

"குளிச்சுட்டு வாடா... இப்ப இங்க சாமியை கும்புடப் போறோம். அதான் அண்ணன் குளிக்கச் சொல்றாரு..." ராமுவும் தலையை ஆட்டி விட்டு பாத்ரூமுக்கு போய் குளித்துவிட்டு வந்தான்.

வந்து பார்த்தபோதுதான் நான்கு பேரும் ஏகத்துக்கும் உருமாறி இருந்தனர். சபரி மலைக்கு போகின்றவர்களைப் போல கறுப்பு வேட்டி சட்டை நெற்றியில் பட்டை என்று பக்தி அவர்களிடம் கமகமவென்று கமழ்ந்தது. வரதனும் ஒரு காவி வேட்டி துண்டு என்று மாறியிருந்தான்.

"என்ன ராமு பாக்கறே... நாம மலைக்கு போகப் போறோம். அதுக்கு மாலை போட்டுக்கப் போறோம் இப்ப..."

"அப்படிங்களாண்ணே...?"

"ஆமாம்... நீயும் இந்த வேட்டியை கட்டிக்க..."

-வரதன் ஒரு கறுப்பு வேட்டியை எடுத்துத் தந்தான். கட்டிக் கொண்ட ராமுவும் வரதன் அருகில் வந்து அமர, பஜனை ஆரம்பமாயிற்று.

சில சாமி பாடல்களை இதமான குரலில் பாடினான் சிரஞ்ஜீவி. திருப்பிப் பாடினார்கள் மற்றவர்கள். ராமுவுக்கு பக்தி அதிகம். சப்தம் போட்டு பாடப் போனான். சிரஞ்ஜீவி தடுத்து 'மெல்லப்பாடு' என்றான்.

சப்தம் வெளியிலும் கேட்டது.

விஷயம் கருப்பசாமி தாத்தா காது வரையில் போனது.

"என்ன அங்க சத்தம்?"

"தெரியல. சாமி கும்புடற மாதிரி தெரியுது."

"இந்த ராத்திரியில கதவை அடைச்சுகிட்டு எந்த சாமியை கும்புடறாங்க?"

"ஐயப்பனைத்தான். பாட்டைக் கேட்டா அப்படித்தானே தெரியுது."

"இது கார்த்திகை மாசம் கூட இல்லையே..."

"என்னவெல்லாமோ நடக்குது. ராமுவும் இப்ப அங்கதான் இருக்கான்."

"அதான் அந்தப் பய கண்ணுல படலையா?"

"அதை ஏன் கேக்கறீங்க தாத்தா. அவன் இனிமே நம்ம வீட்டு வேலைகளை எல்லாம் செய்ய மாட்டானாம்."

"பொறவு எப்படி வயித்தைக் கழுவுவானாம்?"

"இனிமே வரதன்தான் அவனுக்கு அண்ணனாம். அவனே எல்லாத்தையும் பாத்துக்குவானாம்."

"யாரு அந்த திருட்டுப் பயலா...?"

"சத்தம் போட்டு பேசாதீங்க. நமக்கு எதுக்கு ஊர் வம்பு?"

"அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் வரதன் ஃப்ளாட் கதவு திறந்தது. அந்த நால்வரோடு வரதனும் ராமுவும் தலையில் இருமுடியோடு வெளியில் வந்தனர். வரதன் சத்தம் போட்டு 'சாமியே சரணம் ஐயப்பா' என்று கத்தினான். பின் கதவைத் பூட்டிக் கொண்டு அவர்களோடு சேர்ந்து காரை நோக்கி நடந்தான்.



"என்ன வரதா இது வேஷம்?" - வழக்கம் போல ஒரு பாட்டிதான் வாய் விட்டாள்.

"மலைக்கு போவுறோம். உனக்கு இது வேஷமா தெரியுதாக்கும்?" - வரதன் வெடித்தான்.

"இந்த மாசம் மலைக்கு யாராச்சும் போவாங்களா என்ன?"

"இப்பல்லாம் எல்லா மாசமும் போறாங்க."

-வரதன் தான் பதில் சொன்னான். ராமு ஏதோ மந்திரித்த கோழி போல வெறித்தபடி இருந்தான்.

"டேய் ராமு நீயும் மலைக்கு போறியா இப்ப...?"

"ஆமாம்!" - ஒரு வார்த்தையில் அவனிடம் பதில்.

"நேரம்தான்..." - கிழவி மோவாயில் கை பதித்தாள். அவர்கள் புறப்பட்டனர். கார் வெகு வேகமாக சீறிக் கொண்டு கண்களை விட்டு மறைந்தது. கருப்பசாமி தாத்தாவுக்கு எல்லாமே ஆச்சரியமாக நம்ப முடியாததாக இருந்தது.

'அந்த வரதன் என்னவோ பண்றான்...!" என்றார்.

***




## ஜனவரி – 5 – 1996

'நான் இந்தியா வந்த நோக்கம் ஈடேறத் தொடங்கி விட்டது. இப்பொழுது எனக்கு காயகல்பம் செய்யத் தெரியும். அதே சமயம் மனோவசியம் என்னும் ஹிப்னாடிசமும் தெரியும். இந்தக் கலை மிக உன்னதமான கலை. ஆனால் இது எல்லோருக்கும் வசப்படாது. லட்சத்தில் ஒருத்தருக்கு வசப்பட்டால் பெரிய விஷயம்.

மனசு ஒரு மகா சமுத்திரம். இதன் மையத்தை கண்டறிந்து அதில் போய் எண்ணங்களே இல்லாமல் நிற்கத் தெரிய வேண்டும். ஒரு நொடி, ஒரே ஒரு நொடி எண்ணங்கள் இல்லாமல் இருப்பது எத்தனை சிரமம் என்பது முயற்சித்துப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும்.

மனசு ஒருமுகப்பட்டு எண்ணங்களே இல்லாத வெறுமை நிலையை அடைய, முதலில் உடம்பை பக்குவப்படுத்த வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டேன்.

உடம்பு வசப்பட்ட பின்புதான் மனது வணங்கியது.

***



## சாம் கிரேட்மேன் டயரிக்குறிப்பிலிருந்து

சரியாக பதினைந்து நாட்கள் கழிந்து விட்டது.

அபார்ட் மெண்ட் முன்பு அன்று போலவே அந்த நால்வரின் கார் வந்து நின்றது. அதிலிருந்து ராமுவும் வரதனும் உதிர்ந்தார்கள்.

ராமு ஆச்சரியப்படும்படி மாறியிருந்தான்.

மொட்டைத் தலை, ஜீன்ஸ் பேண்ட், டி ஷர்ட்!

ஹிந்தி சினிமாப்பட வில்லன் போல சூட்கேஸை எடுத்துக் கொண்டு அவன் நடந்து வந்தபோது பலருக்கு அடையாளம் தெரியவில்லை.

"யாரு ராமுவா... நம்ம ராமுவா?"

"அட ஆமாக்கா... பார்த்தா தெரியல யாக்கும். ஏண்டா என்னடா இது மொட்டைத் தலை..."

-பதிலுக்கு ராமு அவர்களை வெறித்துப் பார்த்தான். பின்னால் வந்த வரதன் "டேய் நடடா" என்றான் அதட்டலாக.

வரதனும் மொட்டை போட்டிருந்தான். "என்ன வரதா... மொட்டையெல்லாம் போட்டுருக்கே எந்த கோயிலுகக போய் மொட்டை போட்டீங்க?"

"அவசியம் தெரியணுமாக்கும்?"

"சொன்னா சொல்லு... இல்லாட்டி போ."

"திருப்பதி..."

"பதினைந்து நாளா கோவில் கோவிலதான் சுத்துனீங்களாக்கும்?"

"ஆமாம்..."

"ஆனா எங்கியோ அமெரிக்கா பக்கம் போய்ட்டு வந்த மாதிரி படு மாடர்னா வந்துருக்கே?"

"நான் எப்படி வந்தா உனக்கென்ன?"

"அது சரி... ஏண்டா ராமு நீ வாயைத் திறந்து பேச மாட்டியா?"

-ராமு திரும்பிப் பார்த்தான். எந்திர மனிதன் போல மிகச் செயற்கையாக ஒரு சிரிப்பு சிரித்தான். சற்று பயங்கரமாகக் கூட இருந்தது.

கருப்பசாமி தாத்தா பார்த்துக் கொண்டே இருந்தார். மற்றவர்களைப் போல எந்த கேள்வியும் கேட்கவில்லை.

அன்று வெள்ளிக்கிழமை.

அவர் வீட்டு முன்னால் மந்திரிக்க, தாயத்துக் கட்டிக் கொள்ள என்று ஒரு கூட்டம். அவர்களை அனுப்பத் தயாரானார்.

அன்று பத்திரிகையாளர் ஒருவர் வந்திருந்தார். கருப்பசாமி தாத்தா மந்திரிப்பதை படம் எடுத்து விட்டு எல்லோரும் போன பிறகு அவரை பேட்டி காணத் தொடங்கினார்.

"மந்திரிச்சு தாயத்து கட்டறதால வர்றவங்க பிரச்சினை எப்படித் தீருது?"

"இந்த கேள்விக்கு அஞ்சும் மூணும் எட்டுன்னு பளிச்சுன்னு புரியற மாதிரி பதில் சொல்ல முடியாது தம்பி."

"பரவாயில்லை... நீங்க சொல்லுங்க. நான் புரிஞ்சுக்கப் பார்க்கறேன்."



"சரி சொல்றேன்... உங்களுக்கு புரியற மாதிரியே சொல்றேன். மந்திரம்னா என்ன?"

"மந்திரம்னா... மந்திரம்தான்."

"அதான் என்ன...?"

"சுக்லாம்பரதரம் அப்படி இப்படின்னு சொல்வீங்களே அதானே மந்திரம்."

"அதுவும் மந்திரம்தான்... அதெல்லாம் என்ன?"

"உங்க கேள்வி புரியலை மிஸ்டர் கருப்பசாமி அதெல்லாம் என்னன்னா... மந்திர வார்த்தைகள் அவ்வளவுதான்."

"இப்பதான் விஷயத்துக்கு வந்திருக்கீங்க. வார்த்தைகள்னு சொன்னீங்கள்ள... அந்த வார்த்தைங்கறது என்ன?"

"புரியலை... நீங்களே சொல்லிடுங்க..."

"சப்தம்... சப்தம்னு சொல்லலாமா?"

"ஓ... சௌண்ட்‌ குட்... சொல்லலாம்."

"அந்த சப்தம் சிறப்பா இருந்தா இசை. அதாவது பாட்டு கேட்டா மனசு மயங்குது. அதுவே தப்பா இருந்தா நாராசம். அதைக் கேட்டா கோபம் வருது இல்லியா...?"

"நிச்சயமா?"

"அப்ப சத்தத்துக்கு நம்மை சந்தோஷப் படுத்தற கோபப்படுத்துற சக்தி இருக்குதுன்னு ஒத்துக்கறீங்க..."

"நிச்சயமா... அதுல என்ன சந்தேகம்..."

"அந்த சத்தத்துல சில விசேஷ ஒலி அலைகளை உள்ளடக்கின சொற்கள்தான் மந்திரச் சொற்கள்."

"ஐ. சி.."

"அதைச் சொல்லும்போது உடம்புல சில அதிர்வுகள் ஏற்பட்டு உடம்போட ரசாயனத்தில சில மாற்றங்கள் நிகழுது.."

"எப்படி?"

"நல்ல பாட்டு அழற குழந்தையை தூங்க வைக்கற மாதிரி, சந்தோஷச் செய்தி நம்மை குதூகலமடைய வைக்கற மாதிரி. சில மந்திரச் சொற்களுக்குன்னு சில சக்தி இருக்கு."

"அப்படின்னா நீங்க மந்திரிக்கும்போது அப்படித்தான் ஆகுதா..?"

"ஆமாம்.. எனக்குள்ள ஏற்படற மாற்றமும் வைப்ரேஷனும் என்னிடமிருந்து உங்களுக்கு பரவுது."

"இதை நான் உணர முடியுமா?"

"பொதுவுல இந்த தேகத்தால உணர முடிஞ்ச அளவு உணர முடியாத அளவுன்னு இரண்டு வரம் இருக்கு. திருஷ்டித் தாக்கம், பொறாமை உணர்வு போன்றவை எல்லாம் கண் வழியா நாம உணர முடியாதபடி நம்மை தாக்குது.. அதே உணர முடியாத விதத்துல அது நீங்கவும் செய்யுது."

"அது எப்படி... பசியை நான் உணர்றேன். இசை கேட்டா சந்தோஷத்தை நான் உணர்றேன். நீங்க சொல்ற மந்திரத்தால எனக்குள்ள ஏற்படற மாற்றத்தை மட்டும் எப்படி என்னால உணர முடியாம போகுது.."

"அதுதான் உடம்போட அமைப்புங்கறது. ஒரு பயங்கரமான விஷயத்தை பார்க்க நேர்ந்தா நாக்கு உலர்ந்து போகுதே எதனால..? உடம்புல



சில சுரப்பிகள் தாறுமாறா சுரக்குதே எதனால..?"

"தெரியல.."

"இந்த உடம்பு பல விஷயங்கள்ள அநிச்சையானது. அது விருப்பப்படிதான் நம்மை செலுத்தும். நம்ம உடம்பு நம்மகிட்ட தானே இருக்கு?"

"ஆமாம்."

"நாமதானே இதோட எஜமான்.."

"ஆமாம்."

"நாம சொன்னா அப்ப இந்த உடம்பு கேக்கணுமா வேண்டாமா?"

"கட்டாயம்.." .

"அப்புடின்னா அடுத்த வேளைக்கு பசிக்கக்கூடாதுன்னு வயித்துக்கு கட்டளை இட நம்மால முடியுமா?"

-கருப்பசாமி தாத்தா எங்கே வருகிறார் என்று தெரிந்து அந்த ரிப்போர்ட்டர் ஒரு முழி முழித்தான்.."

"முடியாதில்லையா?"

"முடியாதுதான்.."

"அப்ப நமக்குள்ள நமக்கு கட்டுப்படாத நம்ம பேச்சை கேட்காத நம்மை தன் விருப்பத்துக்கு இழுத்துக்கிட்டு போற விஷயங்கள் இருக்குதா?"

"ஆமாம்.. ஆமாம்.."

"அப்ப நாம இந்த உடம்புக்கு அடிமை தானே?"

"நிச்சயமா.."

"நமக்கு நம்மை பத்தியே தெரியாது

தானே?"

"தெரியாதுதான்..."

"தெரிஞ்சுக்கணுமா வேண்டாமா?"

"தெரிஞ்சுக்கணும்..."

"அதுக்கு விஞ்ஞானம் ஒருவிதமாவும், மெய்ஞானம் ஒருவிதமாவும் உதவி செய்யுது. இதுல விஞ்ஞானம் கூட பிறரை பரிசோதித்து நம்மை தெரிஞ்சுக்க வழி காட்டினா, மெய் ஞானம் நம்மை நாமளே பரிசோதிச்சு தெரிஞ்சுக்க வழிகாட்டுது."

"எப்படி... எப்படி..."

"டாக்டர்கள் என்ன பண்றாங்க. செத்துப் போன ஒரு உடம்பை ஆராய்ச்சி செய்து இது இதயம், இது மூளைன்னு சொல்றாங்க இல்லியா?"

"ஆமாம்..."

"அவங்களையே அறுத்துப் பார்த்து தெரிஞ்சுக்க முடியாது இல்லியா?"

"ஆமாம்..."

"அப்ப விஞ்ஞானத்துகு ஆரயாறதுக்கு வெளில ஒண்ணு வேணுமா?"

"கட்டாயம்."

"ஆன மெய் ஞானத்துக்கு வெளிய இருந்து எதுவுமே தேவை இல்லை... உன் உடம்பை நீ புரிஞ்சுக்க. அதுபல யோக ரகசியங்களை அடுக்கி வைச்சிருக்குது. அதை தெரிஞ்சுகிட்டு அதன்படி நடந்துக்கும்போது நம்ம உடம்புல ஒளிஞ்சிருக்கற பல வித சக்திகள்



வெளிப்பட ஆரம்பிக்குது..."

"உதாரணத்துக்கு ஒண்ணு சொல்லுங் களேன்..."

"சொல்றது என்ன... செய்தே காட்றேன். நான் இப்ப உங்களை தூங்க வைக்கவா?"

"அப்படியா... எங்க தூங்க வையுங்க பார்ப்போம்."

-கருப்பசாமி தாத்தா அந்த பத்திரிகை யாளனை தான் சொன்னபடிச் செய்யத் தயாரானார். அப்பொழுது அவனுக்குப் பின்னால் ஒரு நிழலாடியது. அவனை விலக்கிக் கொண்டு பார்த்தார். ராமு நின்றிருந்தான்.

"வாடா... என்ன இது கோலம்?"

-ராமு பதிலே சொல்லாமல் அவரை முறைத்துப் பார்த்தான்.

"உன்னைத்தாண்டா... வாயைத் திறந்து பேச மாட்டியா?"

-அவன் பேசவில்லை. சில நொடிகள் அவரைப் பார்த்துவிட்டு திரும்பத் தொடங் கினான். அப்பொழுது தான் அவனது வயிற்றுப் பக்கம் பார்த்தார். இடுப்பை ஒட்டி வயிற்றின் தொப்புளுக்கு சற்று மேல் இருந்து பின் முதுகு வரை ஒரு கட்டு.

"என்னடா அது கட்டு?"

-அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை. ஆனால் வரதன் கூப்பிடும் குரல் கேட்டது.

"டேய் ராமு... அங்க என்னடா பண்றே?"

"வந்திட்டேண்ணே..." -ராமு ஓடினான்.

கருப்பசாமி தாத்தாவுக்கு திமிறியது.

ரிப்போர்டர். "மிஸ்டர் கருப்பசாமி என்னை தூங்க வைக்கறேன்னு சொன்னீங்களே..." என்று இடையில் நச்சரிக்க, தற்காலிகமாக ராமுவின் மேல் இருந்த பார்வையை விலக்கிக் கொண்ட கருப்பசாமி தாத்தா, அந்த ரிப்போர்ட்டரை தூங்க வைக்கத் தயாரானார்.

அவன் எதிரில் ஒரு டாலர் சங்கிலியை எடுத்து பெண்டுலம் போல ஆட்டத் தொடங்கினார்.

"எதுக்கு இதை ஆட்டறீங்க?"

"பேசாம இதை பாருங்க..."

"பார்த்தா?"

"பாருங்க தம்பி..."

"சரி பாக்கறேன்..."

"இப்ப நீங்க எதை பாக்கறீங்க..?"

"ஆடிக்கிட்டு இருக்கற செயினை..."

"செயின்ல எதை..?"

"லாக்கெட்டை..."

"குட்... பாத்துகிட்டே இருங்க..."

"அதான் பார்த்துகிட்டே இருக்கேன்ல..."

"நீங்க பாக்கறது லாக்கெட்டை தானே?"

"ஆமாம்..."

"வேற எதையும் இல்லையே..?"

"நிச்சயமா இல்லை..."

"அப்ப உங்க மனசுல இப்ப லாக்கெட் மட்டும்தான் இருக்கு..."



"ஆமாம் லாக்கெட் மட்டும்தான் இருக்கு."

"இப்ப அது நிக்கப் போகுது... நிக்கப் போகுது... நின்னுடுச்சு. நீங்க பார்வையை நகர்த்தக்கூடாது..."

"நகர்... த்... தலை..."

"நின்னுட்ட லாக்கெட் கூட இப்ப உங்க மனசை விட்டு மறையப் போகுது. மறைஞ்சிடிச்சு."

-தாத்தா அந்த லாக்கெட்டை அப்படியே மேலே தூக்கிப் போட்டு இன்னொரு கையால் லாவகமாக பிடித்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

அந்த ரிப்போர்ட்டர் சிலை போல உட்கார்ந்திருந்தான்.

"ஒண்ணுமில்லாத மனசு. நீ இப்ப தூங்கு பார்ப்போம்."

-தாத்தா இதமான குரலில் கட்டளையிட தூங்கத் தொடங்கினான்.


தாத்தாவின் பார்வை அடுத்த நொடி வரதனின் ஃப்ளாட் பக்கம்தான் போனது.

வரதனும் ராமுவும் மிடுக்கான உடையில் எங்கோ புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

கையில் ஒரு பிரீஃப்கேஸ்!

தாத்தாவுக்கு புரிந்து விட்டது!

***



## ஜனவரி – 6 – 1906

'வித்தைகளில் அசகாய வித்தை பார்த்த மாத்திரத்தில் ஒருவரைச் சாய்ப்பதுதான். அதில் நான் சந்தித்த சித்தர் அபார திறமை சாலி. இந்த வித்தைக்கு 'நேத்திரக்களரி' என்று பெயராம். இதோடு தொடர்புடையது தான். எங்கள் மேல் நாட்டில் சிலரால் கையாளப்படும் மெஸ்மரிசம், ஹிப்னாடிசம் போன்ற மனோ வசியக் கலைகள்!

***

## சாம் கிரேட்மேன் டயரிக்குறிப்பிலிருந்து.

ஒரு பெட்டியும் கையுமாக வரதனும் ராமுவும் போவதைப் பார்த்த கருப்பசாமி தாத்தா சாவகாசமாக தாடையை தடவிக் கொண்டு பதிலுக்கு ரிப்போர்ட்டரைப் பார்த்தார்.

அவன் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான். இந்த மாதிரி மனதில் எந்த விதமான எண்ணக் கொதிப்பும் அலைச்சலும் இல்லாமல் ஐந்து நிமிடம் தூங்கினால் கூட போதும். தூங்கிக் கண் விழிக்கும்போது உடம்பு அத்தனை



கலகலப்பாக இருக்கும். கண்களிலும் வெளிச்சம் கூடி விட்ட மாதிரி ஒரு உணர்ச்சி தோன்றும். அந்த உணர்ச்சியை வார்த்தைப் படுத்தவே முடியாது. தாத்தா ராமுவை உத்தேசித்து ரிப்போர்ட்டரை எழுப்பிவிட முடிவுக்கு வந்தார்.

கொஞ்சம் போல தண்ணீர் எடுத்து வந்து முகத்தில் தெளித்தார். ரிப்போர்ட்டரும் விருட்டென்று சிலிர்த்தபடி எழுந்து அமர்ந்தார்.

"என்னப்பா எப்படி இருக்கு?"

"என்னத்த சொல்வேன். பிரமாதமான தூக்கம். இப்படி நான் தூங்கினதேயில்லை."

"சந்தோஷம். மனோ சக்தியை இப்ப உங்களால உணர முடியுதா?"

"உணரமுடியுது. ஆயிரம் வார்த்தைல சொல்லி புரிய வைக்க முடியாததை நீங்க ஒரு அஞ்சு நிமிஷ அனுபவத்துல புரிய வெச்சுட்டீங்க. நம்ம மனசுக்குள்ள இவ்வளவு சக்தி இருக்குன்னு எனக்கு இன்னிக்குதான் தெரிஞ்சிச்சு."

"ரொம்ப சந்தோஷம். எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கு."

-தாத்தா அந்த ரிப்போர்ட்டரை புறப்படத் தூண்டி விட்டார். ரிப்போர்ட்டரும் ஒரு நிமிஷம் என்று தாத்தாவை ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

ரிப்போர்ட்டர் கிளம்பிச் செல்லவும் தாத்தா தன் ஃப்ளாட்டுக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

ஒரு மரப்பலகையை எடுத்து வந்து போட்டு அதன் மேல் ஏறி பத்மாசனமிட்டு அமர்ந்து கொண்டார். கண்களை மூடிக் கொண்டு தியானிப்பது போல எதையோ செய்யத் தயாரானார்!

எதை?

காரைவிட்டு இறங்கிய ராமுவும் வரதனும் பனிச்சென்று தெரிந்த பங்களாவினுள் நுழைந் தனர். சினிமாவுக்கு செட் போட்டதுபோல பெரிய ஹால், முகத்தில் அறைகிற கலரில் சோபாக்கள், கண்ணாடி டீப்பாய்களில் பிளாஸ்டிக் பூச்சரங்கள்.

ராமு தன் வாழ்நாளில் முதல் தடவையாக இப்பொழுது தான் இந்த மாதிரி பங்களாக் களையே பார்க்கிறான். பார்த்து விட்டு பெரிதாக வாயையும் பிளந்தான்.

"ராமு இங்க உக்கார்... வந்துட்றேன்" வரதன் சொல்லிவிட்டு ஹாலில் இருந்து மாடிக்கு ஏறும் படியில் ஏறிச் சென்றான்.

மாடியில் ஒரு கண்ணாடி அறை.

உள்ளே ட்ரிபிள் எக்ஸ் ரம்மை சிப் சிப்பாக நக்கிக் குடிதது க் கொண்டு சிரஞ்ஜீவி.

"வா வரதா..."

"அதான் வந்துட்டேனே. கீழ இறங்கி வரலாம்ல?"

"காரணமாத்தான் வரலை..."

"என்ன காரணம்?"

வரதன் கேட்க சிரஞ்ஜீவியின் கை பக்கத்து ஜன்னலைக் காட்டியது. ஜன்னலுக்கு வெளியே பக்கத்து பங்களாவின் மொட்டை



மாடி அந்த மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரில் ஒரு நபர் உட்கார்ந்து கொண்டு பைனாகுலரில் எங்கெங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

சட்டென்று பார்ப்பதை தவிர்த்து திரும்பிய வரதனிடம் கூக்குரல்.

"சிரஞ்ஜீவி யார் அது?"

"அனேகமா சி.பி.சி.ஐ.டியா இருக்கணும்."

"இருக்கணுமா... உங்களுக்கு கூடவா சந்தேகம்."

"ஆமா... நம்ம அடுத்த அசைன்மென்ட் என்னன்னு எனக்கே தெரியாது. தெரியாத நிலையில் எந்த திட்டத்தையும் போட முடியாது. இப்போதைக்கு இந்த பங்களால தங்கி இருக்கச் சொல்லி ஒரு மணி நேரத்துக்கு முந்திதான் மேல் இடத்துல இருந்து உத்தரவு வந்தது. அதான் உனக்கு தகவல் கொடுத்துட்டு இங்க வந்தேன். வந்தா இங்க இந்த ஆள்...

நிச்சயமா எனக்கு கிடைச்ச தகவலை மோப்பம் பிடிச்சு இங்க வந்து நோட்டம் போட சான்ஸே இல்லைன்னு புத்தி ஒரு பக்கம் சொல்லுது. சி.பி.சி.ஐ.டி., போலீஸ்காரங்களை சாதாரணமா எடை போட்டுடாதேன்னும் புத்தி ஒரு பக்கம் சொல்லுது. அதனாலதான் சந்தேகத்தோட இங்கையே நோட்டம் போட்டுகிட்டு இருக்கேன்."

"அது எப்படி... நீங்க நோட்டம் போட்றது அந்த ஆளுக்கு தெரியாதா?"

"நீ இன்னும் கத்துக்குட்டித் தனமாவே கேள்வி கேட்கறே வரதா. அந்த கண்ணாடியைப் பார்."

-சிரஞ்சீவி தான் அமர்ந்திருக்கும் இடத்திற்கு நேர் எதிரில் சுவற்றில் முப்பது டிகிரி சாய்மானத்தில் மாட்டப்பட்டிருந்த நிலைக் கண்ணாடியை காட்டினான்.

அது நேர் எதிரே ஜன்னலுக்கு அப்பால் அந்த நபர் கைப்பிடிச் சுவர் மேல் உட்கார்ந்து கொண்டிருப்பதை லைவ் டெலிகாஸ்ட் செய்து கொண்டிருந்தது.

"வாவ்.. இதுல இருக்கா சூட்சுமம்."

"இது கேட்டுத் தெரிஞ்சுக்காம நீயும் கண்ணாடியை பார்த்து மட்டும் புரிஞ்சிகிட்டிருந்தா நீ தேறிட்டேன்னு நினைச்சிருப்பேன். ஆனா நீ இன்னும் எல்.கே.ஜி.யாகவே இருக்கே வரதா..." வரதன் உடனே தலையில் நறுக் நறுக் என்று குட்டிக் கொண்டான்.

"சரி சும்மா தலையை குட்டிக்காதே. உன்கிட்ட இன்னொரு விஷயத்தையும் சொல்லணும்."

"என்ன சிரஞ்சீவி."

"இந்த மெட்ராஸ்ல மனோவசியம், மெஸ்மரிசம் ஹிப்னாடிசம் இதோட 'நேத்திரக்களரி'ன்னு அபூர்வ வித்தை தெரிஞ்ச ஒருத்தரும் இருக்கறதா எனக்கு தகவல் கிடைச்சிருக்கு அவரைக் கண்டுபிடிக்கச் சொல்லி உத்தரவும் போட்டுருக்காங்க..."

"நேத்திரங்களரியா.. அப்படின்னா?"

"காட்டுக்குள்ற திரிஞ்சிகிட்டிருக்கற சித்த சன்யாசிகளுக்கு மட்டுமே தெரிஞ்ச ரொம்ப அபூர்வ வித்தை அது."

-சிரஞ்சீவி பதில் சொல்லிக் கொண்டே



கண்ணாடியில் ஒரு பார்வை பார்த்தான். பைனாகுலர் ஆசாமியோடு இப்பொழுது ஒரு பெண் பேசிக் கொண்டிருந்தாள்.

"அபூர்வ வித்தைன்னா எப்படி.. புரியல?"

"ஒரு மனுஷனைப் பார்த்த மாத்திரத்துல அவனை தன் மனசுல நினைக்கற மாதிரி நடந்துக்க வைக்கறது."

"எப்படி.. எப்படி?"

"முண்டம்... இப்ப எனக்கு நேத்திரக்களரி தெரியும்னு வெச்சுக்கோ..."

"சரி..."

"உன்னைப் பார்த்த நிமிஷம் டேய் போய் இந்த மாடியில இருந்து கீழ குதின்னு என் மனசுக்குள்ள சொல்வேன். அது உனக்கு பாஸ் ஆகி நீ ஏன் எதுக்குன்னு கேட்காம மாடியில் இருந்து கீழ குதிச்சு தற்கொலை செய்துக்குவே..."

"அது எப்படி முடியும் சிரஞ்சீவி."

"முடியும்.. சில கேஸ்கள் விஷயத்துல அந்த மாதிரி நடந்திருக்கு..."

"நம்பவே முடியல..."

"நீ முதல்ல மெஸ்மரிச, ஹிப்னாடிசத்தையே நம்பலை. உன்னையே அதால மாத்திக் காட்டினப்ப தான் ஒத்துகிட்டே."

"சரி அந்த நபரை கண்டுபிடிச்சு என்ன பண்ணப் போறோம்."

"அவரை பயன்படுத்திக்க முடியுமான்னு பாக்கத் தான்..."

"எப்படி?"

"ட்யூப்லைட்... ட்யூப்லைட்... இப்ப நமக்கு

தெரிஞ்ச வித்தையால ஒருத்தன் மனசை ஆபரேட் பண்ண சம்மந்தப்பட்ட நபர் ஆபரேட் பண்ற நபர்களோட என்னைப் போல ஆபரேட் பண்ற நபர்களோட கண்களைப் பார்க்கனும். அந்த சந்தர்ப்பத்துல நானும் இதமான குரலல்ல பக்குவமா பேசனும். இதுக்கு சில நிமிடங்கள் ஆகும். அதுக்கு பிறகு தான் அந்த நபர் நான் சொன்னபடி நடந்துக்கு வான். ஆனா நேத்திரக்களரி தெரிஞ்சா எதிரி ஒத்துழைக்கனும்கற அவசியமே இல்லை. பார்த்த மாத்திரத்துல சாய்ச்சுடலாம்."

"சிரஞ்ஜீவீ நீ புருடா விடலையே..."

"உன்கிட்ட போய் பேசறேன் பார். இதைப் பார் புரியும்."

சிரஞ்ஜீவி ஒரு டயரியை தூக்கிப் போட்டான். வரதனும் அதைப் பிரித்தான். ஆங்கிலத்தில் அதில் குறிப்புகள்.

"இது என்ன டயரி... எனக்கு இங்கிலீஸ் படிக்கத் தெரியாது..."

"தெரியும்... அதனாலதான் துணிச்சலா இதை உனக்கு காட்டினேன். சாம்கிரேட் மேன்னு ஒரு வெள்ளைக்காரன். இந்தியன் பிலாஸபி, இந்தியன் சித்தா கல்ச்சர், இந்தியன் மித்தாலஜிங்கற மூணு சப்ஜெக்ட்களை இந்த நூற்றாண்டோட தொடக்கத்துல அதாவது 1906 ஆம் வருஷம் ஆராய்ச்சி செய்த ஒருத்தர். இது அவர் எழுதின டைரி. இந்த வெள்ளைக் காரர் இந்த ஆராய்ச்சிகளை செய்ய ஆரம்பிச் சப்போ அவரோட வயசு முப்பத்திமூணு. இங்க வந்து எல்லா ஆராய்ச்சியும் செஞ்சு, காயகல்பம், ஜீவலேகியம்னு மார்க்கெட்ல கிடைக்காத சித்த மருந்துகளை சாப்பிட்டு, கிட்டத்தட்ட நூத்தி



இருபத்தி ஒரு வருஷம் உயிரோட இருந்தான். இப்பதான் மூணு நாலு வருஷம் முன்னாடி செத்துப் போனான். சாகும் போது இந்த டயரியோட இன்னும் பல விஷயங்களை ஒரு பத்திரிகைக்காரர்கிட்ட கொடுத்து பப்ளிஷ் பண்ணச் சொல்லிட்டு செத்துப்போனான்.

அந்த பத்திரிகைக்காரர்கிட்ட இருந்து நம்ம இயக்கம் இதை ஒரு கோடி ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கினாங்க..."

"ஒரு கோடி ரூபாய்க்கா..?"

"வாயைப் பொளக்காதே. இதுல உள்ள தகவல்கள் பல கோடி மதிப்புள்ளது. இந்த டைரில தான் ஒரு குறிப்பு இருக்கு. அதுதான் இந்த சென்னைல அவரைப் போலவே காயகல்பம் ஜீவலேகியம்னு சாப்பிட்டு இன்னும் உயிரோட இருக்கற ஒருத்தரைப் பத்தி சொல்லியிருக்கு.

அந்த நபருக்குதான் 'நேத்திரக்களரி' தெரியுமாம்...

"அவர் பேர் அட்ரஸ்லாம்..."

"பேர் மிஸ்டர் பிளாக்னு சொல்லப் பட்டிருக்கு. அவர் அனேகமா இன்னொரு வெள்ளைக்காரரா தான் இருக்கனும். அதனால கண்டுபிடிக்கறது சுலபம்னு நினைக்கறேன்."

"அவரைக் கண்டுபிடிக்கறோம்னே வை. அந்த நபர் நம்ம திட்டத்துக்கு ஒத்து வருவாரா?"

"இப்ப தான் நல்ல கேள்வி கேட்டிருக்கே. பொதுவுல இந்த மாதிரி வித்தை தெரிஞ்ச ஆட்கள் நம்மை மாதிரி இயக்கப் பணிகள் செய்யமாட்டாங்க.

"பின்ன எப்படி அவங்களைப் பயன்படுத்திக்க முடியும்?"

"அவங்ககிட்ட அந்த நேத்திரக்களரியை கத்துகிட்டு நாம பயன்படுத்தலாம் இல்லியா...?"

"ஓ... நீ அப்படி வர்றியா?"

"நீதான் ட்யூப்லைட்டாச்சே..." - செல்லமாக வரதனை திட்டிவிட்டு திரும்ப கண்ணாடி வழியாக பைனாகுலர் ஆசாமியைப் பார்த்தான். அந்த நபர் தன்னோடு பேசிக் கொண்டிருந்த பெண்ணிடம் பைனாகுலரைத் தந்து வானத்தில் எதையோ காட்டிக் கொண்டிருந்தார்.

"வரதா... இந்த ஆள் சி.பி.சி.ஐ.டி. இல்ல... நான் அநாவசியமா சந்தேகப்பட்டுட்டேன்."

"எப்படி சிரஞ்ஜீவி இல்லைங்கற முடிவுக்கு வந்தே?" எனக்கு கொஞ்சம் சொல்லேன்."

"வானத்துல பட்டங்கள் பறக்குதுபார். அதை அந்த பெண்ணுக்கு காட்டிகிட்டிருக்கான். அனேகமா கைட் ரேஸ் நடந்துகிட்டிருக்கணும். அதுல தங்களோட டீம் பட்டங்கள் எவ்வளவு உயரத்துல பறக்குதுன்னு பாக்கறான்னு நினைக்கறேன்."

"சிரஞ்ஜீவி நீ எச்சரிக்கைக்கு எச்சரிக்கை. புத்திசாலிக்கு புத்திசாலி, எவ்வளவு வேகமா முடிவுக்கு வர்றே..."

"அதனாலதான் நான் லட்ச ரூபா சம்பளம் வாங்கறேன். நீ இன்னும் பத்தாயிரத்துலையே இருக்கே..."

வரதன் பதிலுக்கு வழிந்தான்.



"வழியாத... அந்த ராமுவோட தானே வந்துருக்கே?"

"பின்ன...?"

"அவனுக்கு என்ன தேவையோ எல்லாம் வாங்கிக் கொடு. அவன் ஆசைகளை நல்லா பூர்த்தி செய்..."

"அப்படின்னா...?"

"அனேகமா அவன் நம்மளோட மூணாவது ஹ்யூமன் பாமாதான் அமைவான்னு நினைக்கறேன்."

"அப்படியா?" - அதிர்ச்சியோடு வாயைப் பிளந்தான் வரதன்.

"சரி வா. இனி. இங்க இருக்க வேண்டியதில்லை..."

-சிரஞ்ஜீவி அவனைத் தள்ளிக் கொண்டு மேலே இருந்து கீழே வந்தான்.

ராமு சோபாவில் அமர்ந்த சுகத்தில் அலுப்பில் தூங்கியே விட்டிருந்தான். வரதனுக்கு அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

"பய தூங்கிட்டானே... வீட்ல நல்லா வேலை வாங்கினியாக்கும்?"

"ஆமா சிரஞ்ஜீவி... மாடும் இவனும் ஒண்ணு."

"போகட்டும். இனி வேலை வாங்காதே. நான் சொன்ன மாதிரி கவனிச்சுக்கோ."

"கவனிச்சுக்கறேன். அப்ப நாங்க இங்க வந்தது வேஸ்ட்டா...?"

"புடலங்கா... இந்த மாதிரி கேள்வி யெல்லம் கேட்டே நேத்திரகளரி கத்துகிட்டு வந்து முதல்ல உன்கிட்டதான் டெஸ்ட் பண்ணுவேன்."

"ஐய்யோ அப்பா ஆளை விடு. நான் புறப்படறேன்."

"கவனம்... உன் அபார்ட்மெண்ட்ல உன்னையும் இவனையும் வித்தியாசமா பாக்காதபடி நடந்துக்கோ..."

"டோன்ட் ஓர்ரி.. நாளைக்கே இவனோட ஒரு சண்டை போட்டு போடா நான் இனி உன் அண்ணன் இல்லைன்னு தற்காலிகமா தள்ளி விட்டுட்றேன்."

"சரி நான் கிளம்பறேன். டேய் ராமு... ராமு..."

-ராமுவை தட்டி எழுப்பி. அவனை இழுத்துக் கொண்டு வெளியேறினான் வரதன். வெளியே போய் காரில் ஏறும்போது கேட்டான்.

"என்னடா வந்த இடத்துல் வாங்கிட்டே?"

"எனக்கே தெரியலண்ணே... யாரோ என்னை தூங்கு தூங்குன்னு சொல்ற மாதிரி இருந்திச்சு."

"இருக்குண்டா இருக்கும்..."

-வரதனின் பதிலைத் தொடர்ந்து கார் திரும்பக் கிளம்பியது.

சிரஞ்ஜீவியின் பார்வை அந்த சாம்கிரேட் மேன் டயரியில் இருந்தது.

***



# 7

## ஜனவரி 7 1906

'சித்தர்களின் சாவகாசமும் அறிமுகமும் என்னை மிகவும் பாதித்து விட்டது. நான் மதுவருந்துவேன் - மாமிசம் உண்ணுவேன் - எங்கள் ஊரில் இது இல்லாமல் இருக்கவே முடியாது. ஒரு நாளைக்கு இத்தனை கலோரிகள் இந்த உடம்புக்கு டாக்டர்கள் தேவை என்று சொன்னதை நான் அறிந்தவன். அதற்காக குறைந்த பட்சமாக ஆயிரத்து ஐநூறு கிராம் வரை சாப்பிட்டு வந்த நான் சித்த சாவகாசத்தால் வெறும் ஐம்பது கிராம் உணவுக்கு குறைந்தேன். பல சித்தர்கள் பச்சை காய்கனிகளைக் கூட சாப்பிடுவதில்லை. அதில் உயிராகிய ஜீவாத்மா உள்ளது' என்று சருகுகளை சாப்பிட்டார்கள். உதிர்ந்து விழுந்த மரப் பட்டை ஒன்றை நீர் விட்டு அரைத்து துளி தேனில் கலக்கி சாப்பிட்டேன். அதில் லட்சம் கலோரி சக்தி இருப்பதாக ஒரு சித்தர் கூறியதை கேட்டு அதிசயித்தேன். ஆனாலும் அத்தனை கலோரி உணவு என் உடலை பருக்க விடாது தேவைக்கு போக மீதத்தை சிறுநீர் பிரித்து விடும் என்றார்

கன். உண்மைதான் அன்று நான் பெருக்கிய சிறுநீர் பசுவின் பாலைப் போல இருந்தது என்றால் நம்புவீர்களா?'

***

## சாம் கிரேட்மேன் டயரிக்குறிப்பிலிருந்து

மரப்பலகை மேல் தியானத்தில் இருந்த கருப்பசாமி தாத்தா மெல்ல கண் விழித்தார்.

எதிரில் கடிகாரத்தில் மணி ஒன்பது.

எழுந்தவர் கைகால்களை உதறிக் கொண்டு ஒரு டம்ளர் மண்பானைத் தண்ணீரை எடுத்துக் குடித்தார். உதட்டை துண்டால் ஒற்றிக் கொண்டு வெளியே வந்தார்.

வரதனும் ராமுவும் காரை விட்டு இறங்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

கூடவே அபார்ட்மெண்ட்டில் குடியிருப்பவர்களின் முணுமுணுப்புகள்!

"இந்த ராமு என்ன இப்படி மாறிட்டான்?"

"அவன் சேர்ந்த இடம் அப்படி!"

ஹூம் இது எதுல போய் முடியும்னு தெரியலயே..."

தாத்தாவிடமும் கவலை தெரிந்தது.

இடுப்பில் வேட்டியும் தோளில் துண்டுமாய் தாத்தா நின்று கொண்டிருப்பதை ராமுவும் பார்த்தான். பார்த்தபடியே கொட்டாவி விட்டான்.

கொட்டாவி விட்டவனை வரதன் உள்ளே



போகும்படி சத்தமாக சொன்னான்.

"டேய் உள்ள, போடா... அங்க என்ன ஆறாவது மாடியில இருக்கிறவரை பாத்துகிட்டு.. போடான்னா..."

"போறேண்ணே..." 'என்றுணே'யிலும் ஒரு கொட்டாவியை விட்டான்.

தாத்தாவுக்கு என்ன தோன்றியதோ... மளமளவென்று அங்கிருந்து நடந்து வரதனின் ஃப்ளாட் முன் வந்து நின்றார். அதற்குள் உள்ளே நுழைந்த வரதன் கதவை தாழிட்டுக் கொண்டு விட்டிருந்தான்.

"டொக்... டொக்..." - கதவைத் தட்டினார் கருப்பசாமி தாத்தா. வரதன் கதவைத் திறந்தான். தாத்தா நிற்பதைப் பார்த்து கொஞ்சம் தடுமாறி விட்டு,

"என்ன வேணும் தாத்தா?"

"ராமு..."

"எதுக்கு?"

"உனக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவனைக் கூப்பிடு."

"அவன் இனி வர மாட்டான்..."

"அதைச் சொல்ல நீ யார்...?"

"நான் அவன் அண்ணன். இதுக்கு மேல வளவளன்னு எதுவும் பேசாம நீங்க கிளம்பிப் போகலாம்."

"என்ன வரதா திடீர் உறவு முறையெல்லாம் கொண்டாட்றே..."

வரதனுக்கு சட்டென்று சிரஞ்ஜீவி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. அதற்கேற்ப பேச்சை மாற்றத் தொடங்கினான்.

"இப்ப உங்களுக்கு ராமு வேணும் அவ்வளவு தானே?"

"ஆமாம்.."

"தாராளமா கூட்டிகிட்டு போங்க... டேய் ராமு.."

ராமு பின்னாலேயே நின்று கொண்டிருந்தான்.

"போடா... தாத்தா கூப்பிட்றார் பாரு."

ராமு மலங்க மலங்க பார்த்தான்.

"போடா... அப்பப்ப என்னால ஆன உதவியைச் செய்வேன். அவ்வளவுதான். அதுக்காக நீ என் கூடவே இருக்கலாம்னா அது முடியாது."

பச்சோந்தியை விட வேகமாக மாறினான் வரதன். தாத்தா இதழ்க்கடையில் மில்லிகிராமில் சிரித்தபடி அதை ரசித்தார்.

"அண்ணே..."

"என்ன அண்ணே... போடா... போய் எப்பவும் போல எல்லாருக்கும் எல்லா வேலையையும் செய்."

"சரிண்ணே..."

"தாத்தா... இப்ப திருப்திதானே?"

-கருப்பசாமி தாத்தா புன்னகையை மட்டுமே பதிலாக வைத்தார்.

***

தாத்தாவின் ஃப்ளாட்!

அல்பமாக சில சாமான்கள் மட்டும் இருந்தது.



தாத்தா இன்னும் அடுப்பு மூட்டித்தான் சமைக்கிறார் என்பது அடுப்படியில் சாணி மெழுகியிருக்கும் மேடையைப் பார்த்தபோது தெரிந்தது.

அங்கேயும் மண் பாத்திரங்கள்தான்!

சரியான ஆஸ்ரம் வாழ்க்கை..

"போய் அடுப்பு மூட்டி வென்னீர்போடு.." என்றார் தாத்தா ராமுவிடம். அவனும் கொட்டாவியோடு நடந்தான்.

"நில்லு.."

-திரும்பினான்.

"எதுக்கு இப்படி தூங்கி வழியறே?"

"தெரியலை தாத்தா... தூக்கம் தூக்கமா வருது.."

"ஏன் சரியா தூங்கலையா?"

"இல்ல.. எப்பவும் இப்படி தூக்கம் வந்ததே இல்லை.."

"சரி... போ... போய் வெண்ணீர் போடு."

-தாத்தா அவனிடம் வேலை வாங்கியதே இல்லை. அன்று வேலை வாங்கித் தொடங்கியிருந்தார். பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

அதில் வேணு கோபாலும் ஒருவர். தாத்தாவுடன் நன்றாகப் பேசுவார். அவர் தாத்தாவை நெருங்கி தன் சந்தேகங்களை கேட்க ஆரம்பித்தார்.

"வணக்கம் தாத்தா..."

"வாப்பா வேணு."

"என்ன தாத்தா - நம்ம ராமுவை ஒரு வழியா அந்த வரதன்கிட்ட இருந்து பிரிச்சு

இழுத்துகிட்டு வந்துட்ட மாதிரி தெரியுதே..."

"அதைக் கேக்கத்தான் வந்தியா?"

"ஏன் தாத்தா கேட்கக் கூடாதா..?"

"சரி கேளு.."

"வரதனுக்கு திடீர்னு ஏன் இத்தனை கரிசனம்...?"

"அதை அவன்கிட்ட போய் கேள்."

"சரி தாத்தா... எப்படி நீங்க போய் ராமுவை அனுப்புன்னு சொன்ன உடனே அனுப்பிட்டான்."

"இதுக்கும் பதிலை அவன் தான் சொல்லணும்."

"எல்லா கேள்விக்கும் இப்படி பொத்தாம் பொதுவா பதில் சொன்னா என்ன அர்த்தம்?"

"நீ தேவையில்லாத விஷயத்துல எல்லாம் தலையிட்டா நான் இப்படித்தான் பேச வேண்டியிருக்கும்."

"எது தேவையில்லாத விஷயம் தாத்தா... ராமு நம்ம அத்தனை பேருக்கும் பொதுவானவன்."

"சரி... அதுக்கு என்ன பண்ணச் சொல்றே?"

"நான் ஒண்ணும் பண்ணச் சொல்லலை. ஒரு அக்கறையோடதான் உங்ககிட்ட பேசவே வந்தேன்."

"அவன் நான் உன் அண்ணன்னு சொல்லியிருக்கான். இவனுக்கும் ஒரு அண்ணன் தேவைப்பட்டிருக்கான். அதான் போய்ட்டான். நீயும் சொல், உனக்கும் ராமு எல்லா உபகாரமும் செய்வான்."



"இங்க நாம எல்லாருமே அவனுக்கு அண்ணன் தம்பிங்கதானே?"

"அதை வார்த்தைல சொல்லாம செயல் படுத்தணும்..."

"செயல்படுத்தாமலா இருக்கோம்...?"

"அப்படியா... அப்படின்னா உன் வீட்டு படுக்கை அறையில் ராமுவுக்கு ஒரு இடம் ஒதுக்குவியா?"

"அது... அது..."

"பார்த்தியா... நீ எல்லாம் வெறும் வார்த்தை அண்ணன்தான்."

"நீங்க மட்டும் என்ன... இவ்வளவு நாளா இல்லாம இப்ப போய் வேலை வாங்கறீங்களே."

"நான் வேலை வாங்கலை, அவ்வளவுதான் இப்போதைக்கு சொல்வேன்."

-அப்போது ராமு அடுப்பைப் பற்ற வைத்ததில் கிளம்பிய புகை, வீட்டுக் கூடம் வரை வந்து இருவர் கண்களையும் அரித்தது.

வேணு பலமாக இருமிவிட்டு கண்களை கசக்கி விட்டுக் கொண்டார்.

"ஆமாம் இது என்ன தாத்தா... இந்த காலத்துலையும் விறகு அடுப்பை யூஸ் பண்ணிகிட்டு."

"அதுதான் மனுஷ வாழ்க்கைக்கு ஆரோக்கியமானது!"

"என்ன தாத்தா இது உளறல். இப்படி கண் எரிய இருமி கஷ்டப்பட்றதுக்கு பேர் ஆரோக்கியமா?"

"நிச்சயமா?" தாத்தா அதிர்ச்சியளித்தார். வேணுவும் விடவில்லை.

"இது எப்படி தாத்தா ஆரோக்கியமாகும்?"

"நான் ஒரு கேள்வி கேட்கறேன் பதில் சொல்..."

"கேளுங்க!"

"இந்த கேஸ் அடுப்பு பரவலா புழக்கத்துக்கு வந்து எத்தனை வருஷமாகுது?"

"அதிக பட்சம் ஒரு இருபது வருஷம் சொல்லலாம்..."

"அப்ப இருபது வயசாகற பசங்க அவ்வளவு பேரையும் கணக்குல எடுத்துக்கோ. இவங்கள்ள யாராவது நீயும் நானும் சிறு வயசுல சாப்பிட்ட மாதிரி சாப்பிடறாங்களா?"

"இப்ப எதுக்கு இந்த கேள்வி..."

"என் கேள்விக்கு நீ பதில் சொல், சாப்பிடறாங்களா?"

"நிச்சயமா இல்ல. நம்ம காலத்துல நாம பறந்து பறந்து சாப்பிட்டோம். இப்ப இருக்கற பசங்களுக்கு கோக், ஐஸ்க்ரீம் இதுதான் பிடிக்குது."

"சரி... ஹார்ட் சர்ஜரி இதய நோய்னு இப்ப தினசரி கேள்விப்பட்றோமே, நம்ம காலத்துல இது எப்படி இருந்தது?"

"சத்தியமா எனக்குத் தெரிஞ்சு அரசியல் தலைவர்களுக்கு மாரடைப்பு வரும், அதை வெச்சுதான் ஹார்ட் அட்டாக்னு ஒரு வியாதி இருக்கறதே தெரியும். என் உறவினர்கள், நண்பர்கள் யாருக்கும் ஹார்ட் சம்மந்தமா பிரச்சினை இருந்து நான் பார்த்ததே இல்லை..."

"சரி... சக்கரை வியாதி?"



"அதுவும்தான்..."

"இப்ப அதெல்லாம் எப்படி இருக்கு?"

"நிச்சயமா வீட்டுக்கு ஒரு சுகர் பேஷண்ட் இருக்காங்க. வீதிக்கு ஒரு ஹார்ட் பேஷண்ட் இருக்காங்க..."

"அதை எல்லாம் தவிர்க்கத்தான் நான் விறகு அடுப்புலையே இன்னும் இருக்கேன்."

"விறகு அடுப்புக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"விறகு அடுப்புல சமைக்கறதுங்கறது ஒரு வகைல அக்னி ஹோத்ரம் பண்ற மாதிரி. அதாவது சூரியக் கடவுளையும் அக்னி பகவானையும் ஆராதிக்கிற மாதிரி... விறகு எரியும் போது உருவாகிற புகையில் பல வித விஷயங்கள் அடங்கியிருக்கு. அது ஒரு வீட்டின் அக்னி மூலைல உருவாகற வெப்பக் கதிர்களை சக்திகரிச்சு விஷத்தை முறிச்சு வீட்டை ஆரோக்கியமா வைக்குது. அதனால சுவாசம் சீராகுது. பசி நல்லா எடுக்குது. உணவும் நல்லா செறிக்குது..."

"அப்படின்னா கேஸ் அடுப்புச் சமையல் சுகாதாரம் இல்லாதத்தா?"

"கேஸ்ங்கறது என்ன... பெட்ரோலியக் கூட்டுதானே?"

"ஆமா..."

"அது வாயுவை அசுத்தப்படுத்துது... அசுத்தமாகற அந்த வாயுவைத்தான் நாமளும் சுவாசிக்கிறோம். ஒரு நாளா இருநாளா... இருபது இருபந்தைந்து வருஷமா இதுதான் நிலை."

"உங்க கருத்தை விஞ்ஞானிகள் ஒத்துக்கு வாங்களா?"

"அவங்க ஒத்துக்கறதை பத்தி எனக்கு கவலையில்லை. நான் சொல்றது என் நம்பிக்கை சார்ந்த தீர்மானமான கருத்து."

"வெளிய சொன்னா சிரிப்பாங்க தாத்தா..."

"நான் நீங்க எதுவும் சொல்லாமலே உங்களை எல்லாம் பாத்து சிரிக்கறேனே... அதைவிடவா?"

"நீங்க ஒரு விசித்திரப் பிறவி தாத்தா..."

"நிச்சயமா?"

"ஆமா நீங்க கல்யாணமே பண்ணிக் கலையா?"

"இதுக்கு நான் பதில் சொல்லி ஓஞ்சு போயிட்டேன்."

"அது சரி இந்த மந்திரிக்கறது பாடம் போட்றதை எல்லாம் எங்க கத்துகிட்டீங்க...?"

-தாத்தா பதில் சொல்லாமல் சிரித்தார்.

"அதெல்லாம் எந்த அளவு தாத்தா உண்மை?"

-மீண்டும் சிரித்தார்.

"நீங்க பாடம் போட்டா குழந்தைங் களுக்கு நல்லா ஆயிடுது. ஆக அதுல ஏதோ இருக்குன்னு தெரியுது. ஆனா கேட்டா வாயைத் திறக்க மாட்டேங்கறீங்களே..."

"உனக்கு சொன்னா புரியாது."

"புரியற மாதிரி சொல்லணும்?"

"எதுக்கு சொல்லணும்?"

"நாங்க தெரிஞ்சுக்கத்தான்..."



"தெரிஞ்சுகிட்டு என்ன பண்ணுவே?"

"ஆஹா ஓஹோன்னு பாராட்டுவேன்."

"வேண்டாம். பாராட்டாதே. இதெல்லாம் பம்மாத்து. அப்படியே நினை."

"என்ன தாத்தா கோவிச்சுகிட்டீங்களா?"

"போதும் வேணு... போய் உன் வேலையைப் பார்..."

-வேணுவும் சரி என்று கிளம்பினார். ஆனால் அவர் பார்வை ஷெல்ப் பக்கம் போனது. அதில் ஒரு க்ரூப் போட்டோ... மிகப் பழைய போட்டோ. ஒரு முப்பது நாற்பது பேர் அமர்ந்திருக்கிறார்கள். சில வெள்ளைக்காரர் களும் அதில் இருக்கின்றனர். மேலே 'குருகுலம்' என்று எழுதப்பட்டிருக்கிறது.

"என்ன படம் இது?"

"நான் குருகுலப் பயிற்சி எடுத்தப்போ எடுத்துகிட்டது."

"1944ன்னு போட்டுருக்கே..."

"ஆமா!"

"வெள்ளைக்காரங்கள்ளாம் இருக்காங் களே..."

"அவங்க இருக்கக்கூடாதா?"

"இல்ல அவங்க எப்படி இந்த இடத்துல..."

"நல்ல விஷயத்துக்கு உலகம் பூரா ஆட்கள் இருக்காங்க."

"அப்ப அந்த குரு குலத்துலதான் நீங்க வித்தை எல்லாம் கத்துகிட்டீங்களா..."

"அப்படியே வெச்சுக்கோ..."

"பிடி கொடுக்காம பேசறீங்க தாத்தா. சரி

நான் வரேன்." -வேணு வாசல்தாண்ட, ராமு அவர் எதிரில் வந்து,

"தாத்தா வெந்நீர் தயார்..." என்றான்.

"சரி... குளிச்சுட்டு வா" - தாத்தா சொன்னது அவனை ஆச்சரியப்படுத்தியது.

"தாத்தா வெந்நீர் எனக்கா?"

"ஆமாம்... குளிச்சிட்டுவா..."

"இப்ப எதுக்கு தாத்தா...?"

அவன் அப்படிக் கேட்கவும் தாத்தா அவன் புருவமையத்தைப் பார்த்தார். அவனுக்கு குறுகுறுத்தது. உள்ளே குட்டியாக ஒரு புழு நெளிகிற மாதிரி இருந்தது. பிறகு சில நொடிகளில் ஜில்லென்று தோன்றியது. அதற்கும் பிறகு குப்பென்று வியர்த்தது. வியர்த்துக் கொட்டிய சில நொடிகளிலேயே உடம்பு குளிரில் நடுங்குகிற மாதிரி நடுங்கத் தொடங்கியது.

"என்ன குளிருதா...?"

"அ- ஆமாம் தாத்தா..."

"வெந்நீர்ல குளிச்சுட்டு வா சுகமா இருக்கும்."

"ச... சரி..." - ராமு குளிப்பதற்காக திரும்பிச் சென்றான்.

தாத்தா தன் தாடியை நீவிக் கொண்டார். பெருமூச்சு விட்டார்.

அப்பொழுது அபார்ட்மெண்ட்டே நடுங்கும்படி ஒரு சப்தம். எட்டிப் பார்த்தார். ஒரு மூன்று வயதுக் குழந்தை பால்கனி கைப்பிடிச் சுவரின் மேல் அமர்ந்து கொண்டு வெளிப்பக்கம் சாய்ந்து விட்ட நிலையில் அலறிக்



கொண்டிருந்தது.

ஓடிப் போய் தூக்க இடமில்லாதபடி அந்த கைப்பிடி சுவருக்கு முன்னால் கிரில் கம்பி. அதில் அதன் உடம்பு நுழைந்துவிட்டது. ஆனால் மற்றவர்களால் கையைத்தான் நீட்ட முடிந்தது.

நீண்ட கையும் குழந்தைக்கு ஒரு சாண் முன்பே முடிந்து போனது.

குழந்தை உயிர் பயத்தோடு கைப்பிடிச் சுவரை பிடித்தபடி கத்திக் கொண்டிருந்தது. பலம் உள்ளவரை இறுக்கிப் பிடித்தபடி இருந்தது.

எந்த நொடியும் அதன் கைப்பிடி தளரலாம்.

தளர்ந்தால்...?

நூறு அடிக்கும் மேலான உயரத்தில் இருந்து விழுந்து கபாலம் உடைந்து அந்த க்ஷணமே சாக வேண்டியதுதான்.

ஒரு கூட்டமே எப்படி காப்பாற்றலாம் என்று பரிதவித்துக் கொண்டிருந்தது.

தாத்தாவும் பார்த்தார்.

நெடு நாட்களாக குழந்தை இல்லாமல் இருந்த ஒரு தம்பதிக்கு பிறந்திருக்கும் குழந்தை. அதைப் பெற்றவள் கதறிக் கொண்டிருந்தாள்.

சிலர் தீ அணைப்புத் துறைக்கு போன் செய்ய ஓடினார்கள். சிலர் மாடிக்கு சென்று கயிறு கட்டிக் கொண்டு இறங்கும் முயற்சியில் இருந்தனர்.

தாத்தா நடுவில் குடைந்து கொண்டு சென்றார்.

பால்கனி கிரில் நடுவில் முகத்தை வைத்துக்

கொண்டு அழும் குழந்தையை பார்த்தார்.

பிடி நிறையவே தளர்ந்து இன்னும் சொற்ப நொடிகளில் குழந்தை விழப் போகிறான் என்பது தெரிந்து விட்டது.

கீழே ஒரு போர்வையை வைத்துக் கொண்டு அதில் பிடிக்க முயற்சித்தபடி சிலர். ஆனால் விழும் வழியில் நுன்னல் ஸ்லாபுகள் குறுக்கிட்டபடி இருந்தன. அதில் மோதித்தான் குழந்தை கீழே விழும்..

ஐய்யோ என்ன கொடுமை இது?"

பெற்றவள் தலையிலடித்துக் கொண்டாள்.

பார்த்துக் கொண்டிருந்த தாத்தாவின் கண்களில் மட்டும் நம்பிக்கை ஒளி.

உற்றுப் பார்த்தவர் குழந்தையை கூப்பிடத் தொடங்கினார். "டேய் ராஜா.. வா.. வா.. இந்தப் பக்கமா வா.. வந்துடு.. வா.. வா.."

"என்ன தாத்தா நீங்க. கூப்பிட்டா புரிஞ்சுகிட்டு வர்ற குழந்தையா அது..." - பின்னால் இருந்து ஒரு பதட்டம் நிறைந்த சத்தமான கமெண்ட்.

தாத்தா அசரவில்லை.

"வந்துடு... வந்துடு... வா... வா..." - தாத்தாவின் அழைப்புக்கு ஆச்சரியப்படும் படியான பலன். அந்தக் குழந்தை மலை ஏற முயற்சிப்பவர்கள் தம்கட்டி தங்கள் உடம்பை தூக்கிப் போடுவது போல அழுவதை நிறுத்தி விட்டு முயற்சிக்க ஆரம்பித்து விட்டது.

எல்லோரிடும் ஆச்சரியப் பதட்டம்.

"ம்... வா... வா... வந்து... வந்துடு பார்ப்போம்."



"என்ன ஆச்சரியம்... அந்த குழந்தை புரிஞ்சு இந்த பக்கமா ஏறி வருதே.. அட வந்துடிச்சே?"

-குழந்தை பால்கனி கைப்பிடிச் சுவற்றின் இந்தப் பக்கத்திற்கு வந்து விழுந்து எழுந்தும் நின்றது. பிறகு 'தத்தக்கா பித்தக்கா' என்று நடந்து கிரில் அருகே வர தாத்தா அதைப் பிடித்துக் கொண்டு லாவகமாக கிரில் வழியே வெளியே எடுத்தார்.

அப்பாடா! பெற்றவள் தாத்தா காலில் விழுந்தாள். எல்லோரிடமும் பெருமூச்சு.

தாத்தா குழந்தையை ஒப்படைத்து விட்டு சாதாரணமாக அங்கிருந்து கிளம்ப முயன்றார். எல்லோருமம அவர் கையைப் பற்றி குலுக்கினார்கள். வேணு முதல் முறையாக அவரை நெருங்கி சரேலென்று காலில் விழுந்தார்.

"ஏய் எழுந்திருப்பா.. என்ன இது?"

"நீங்க நிஜமா அசாதாரண மனுஷன்தான். அதான் கால்ல விழுந்தேன். ஆசீர்வாதம் பண்ணுங்க."

தாத்தா சிரித்தபடி தலையைத் தடவிக் கொடுத்து விட்டு தன் ஃப்ளாட்டுக்குள் நுழைந்தார். ராமு குளித்து விட்டு தயாராக இருந்தான்.

"குளிச்சிட்டியா?"

"உம்."

"இப்ப தூக்கம் வரலியே.."

"இல்ல தாத்தா.."

"அப்படி உட்கார்..." - அவன் போய் உட்கார்ந்தான். உட்காரும் போது சற்று

சிரமப்பட்டான்.

"இடுப்புல என்ன?"

"ஆபரேஷன் புண்ணு! வரதண்ணனோட வெளியூர் போயிருந்தப்ப வயித்து வலி வந்துச்சு. டாக்டருங்க ஆபரேஷன் பண்ணணும்னு சொன்னாங்க. அண்ணன்தான் செலவு செய்தாரு. அந்த காயம்தான்!"

"வயித்து வலிக்கு ஆபரேஷனா... புதுசா இருக்கே."

"ஆமாம். பண்ண பிறகு இப்ப வலி இல்லை..."

-அவன் வெள்ளந்தியாக சொல்ல தாத்தா ஊன்றிப் பார்த்தார். அருகே அழைத்து வயிற்றைத் தொட்டுப் பார்த்தார். இடுப்பில் தையல் தெரிந்தது.

"வயித்து வலிக்கு கிட்னி இருக்கற முதுகு இடுப்புப் பக்கம் ஆபரேஷன் பண்ணியிருக்காங்களே..."

"எனக்கு அதெல்லாம் எதுவும் தெரியாது தாத்தா."

"சரி... அவனோட எங்க போனே...?"

"எங்கேன்னு தெரியாது. அண்ணன் பெரிய பெரிய பங்களாக்கெல்லாம் கூட்டிகிட்டு போச்சு... அவங்க யார் யாரோ இருந்தாங்க."

"நீ அங்க என்ன பண்ணே?"

"நான் எதுவும் பண்ணலை. உக்காந்துகிட்டுதான் இருந்தேன்."

"சரி... இனியும் கூப்பிட்டா போய்ட்டுவா. போய்ட்டு வந்து அங்க நடந்ததை அப்படியே சொல்லணும். என்ன?"



"சரி தாத்தா."

-தாத்தா தாடையை வருடியபடி யோசிக்கத் தொடங்கினார்.




## ஜனவரி 8 1906

எனக்கு பிறகு எனது அனுபவங்கள் இந்த உலகிற்குத் தெரிய வேண்டும். அதுவே என் ஆசை. உலகத்திலேயே பாரத பூமியைப் போல ஒரு பூமி இருக்க முடியாது.

இங்குள்ள மெய்ஞானிகள் முன்னால் எங்கள் விஞ்ஞானிகள் மிகச் சிறியவர்கள்.

உடம்பின் ஒவ்வொரு உறுப்பின் சக்தியையும் இங்குள்ளவர்கள் உணர்ந்திருக்கிற மாதிரி யாரும் உணர்ந்து வைத்திருக்கவில்லை. அந்த சக்தியை பயன்படுத்தாமலே நாம் அனைவரும் இந்த உலக வாழ்வை முடித்துக் கொள்கிறோம். உண்ணாமல் காற்றின் பிராண வாயுவை மட்டுமே நம்பி உயிர் வாழலாம்...

அழுகும் ஒரு பொருளை இந்த தேகத்தை அழியாதபடி திடமாகவும் வைத்திருக்கலாம்...

உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டு

உலகில் நடப்பதை பார்க்கலாம்.

விண்ணில் ஏறிப் பறக்கலாம்.

அடுத்தவர் உடம்புக்குள் புகுந்து கொண்டு அவர்களை இயக்கலாம்.

இந்திய மண்ணின் 'யோகங்கள்' இதற்கு வழி காட்டுகின்றன. இத்தனை வித்தை தெரிந்தவர்களும் உண்டு. இதில் சில வித்தை மட்டும் கற்றவர்களும் உண்டு. எனது இனிய நண்பர் மிஸ்டர் பிளாக் இதுபோல பல வித்தை தெரிந்தவர்!

***

## சாம் கிரேட்மேன்

## டயரிக்குறிப்பிலிருந்து

விடிந்துவிட்டது.

ராமுவும் அபார்ட்மெண்ட்டின் வீட்டு வேலைகளில் வழக்கம் போல செயல்படத் தொடங்கி விட்டான்.

நடுநடுவே வயிற்று வலி வரும்போது மட்டும் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டான்.

வரதனும் கண்டும் காணாத மாதிரி இருந்தான்.

கிட்டத்தட்ட ஒரு வாரம் ஓடிவிட்டது.

ஒருநாள் வரதனுக்கு சிரஞ்ஜீவியிடம் இருந்து போன் வந்தது.

"என்ன சிரஞ்ஜீவி?"

"ராமு என்ன பண்ணிகிட்டிருக்கான்."

"ஒரு பிரச்சினையுமில்லை. அவன்



ட்டும் அவன் வேலையை செய்துகிட்டிருக் ன்."

"அவனை யாரும் சந்தேகப்படலையே..?"

"இல்லை... நானும் கண்டும் காணாத ாதிரிதான் இருக்கேன். அது சரி மேலிடத்தில் இருந்து தகவல் எதுவும் இல்லையா?"

"வந்துருக்கு... வர்ற பதினைந்தாம் தேதி த்திர தினம் வருது இல்லியா?"

"ஆமா..."

"அன்னிக்கு ராமுவுக்கு வேலை இருக்கு. வனை இப்பவே தயார் படுத்திடு."

"என்ன வேலை சிரஞ்ஜீவி..."

"நம்ம கொள்கைகளுக்கு எதிரான த்திரியை பரலோகம் அனுப்பற வேலைதான்."

"அப்படின்னா ராமு..?"

"அவன்தான் அன்னிக்கு மனித வெடி ண்டு."

"அப்ப நான் இன்னிக்கே தயாராயிட்றேன்."

"கவனமா செயல்படு. ராமு ராமுவா போகப் போறதில்ல. அவனுக்கு மாறுவேஷம் ாட்டு முகத்தை மாத்தற வேலை இருக்கு."

"இதெல்லாம் எதுககு சிரஞ்ஜீவி."

"ஒருவேளை அவன் வெடிச்ச பிறகு அவன் ழகம் எதுவும் ஆகலேன்னா நாம யாரும் ாட்டிக்கக் கூடாது பாரு. அதுக்காகதான்."

"எப்படி?"

"சரியான ட்யூப்லைட் நீ. ராமுதான் மனித வெடிகுண்டுன்னா அவன் இருந்த உன்னோட அபார்ட்மெண்ட் மொத்தமும் போலீஸ்

பார்வைக்குள்ளாகும். குறிப்பா நீ மாட்டுவே நம்ம ஆட்கள்ள ஒரு ஆள் மாட்டினாலும் போச்சு. போலீஸ்காரர்களுக்கு அந்த ஒரு ஆளு போதும். நம்மை பத்தின எல்லா விவரங்களை யும் கறந்துடுவாங்க."

"வாவ்.. எவ்வளவு எச்சரிக்கையா திட்டம் .போடறே நீ."

"அப்படிப் போட்டாதான் வண்டி ஓடும். புரிஞ்சுக்கோ. அப்புறம் இன்னொரு விஷயம் அப்படி ஒருவேளை அவன்முகம் சிதையாம அகப்பட்டுகிட்டா நீ அபார்ட்மெண்ட்டை காலி பண்ணிடணும். புரியுதா?"

"சரி சிரஞ்ஜீவி."

"இனிமே உனக்கு நான் போன் பண்ண மாட்டேன். அசைன்மெண்ட் ஆரம்பிச்சிட்டா எப்படி நடந்துக்கணும்னு நமக்கு சொல்லப் பட்டிருக்கு. அதுல தடயங்கள் உருவாகற எந்த விதத்துலையும் நம்ம செயல்பாடு இருக்கக் கூடாது."

"அப்ப உன்கூட நான் எப்படி பேசறது..?"

"உன் அபார்ட்மெண்ட்டுக்கு எலெக்ட்ரீ ஷியனா, பாத்திரத்துக்கு ஈயம் பூசறவனா, டி.வி. ரிப்பேர் பண்றவனா பல வேஷங்கள்ள நானும் நம்ம ஆட்களும் வருவோம். கருப்புத் தலைப்பா கட்டி இருப்பான். கழுத்துல தாயத்து கட்டிய கருப்புக் கயிறு இருக்கும். இதை வெச்சு நீ அடையாளம் தெரிஞ்சுக்கலாம்."

"ஓ.கே. சிரஞ்ஜீவி."

"கவனமா நடந்துக்கோ. ராமுவை அப்பப்ப டச் பண்ணிக்கோ.."

"நான் பாத்துக்கறேன்."



"மிஸ்டர் பிளாக்னு ஒருத்தர் இருக்கறதா சொன்னேன் இல்லியா?"

"ஆமாம்.."

"அவரைக் கண்டபிடிக்கற அசைன் மெண்ட்டும் இப்ப எனக்கு கொடுக்கப்பட் டிருக்கு."

"எப்படி கண்டுபிடிக்கப்போறே?"

"நாளைக்கு பேப்பர் பார். உனக்கு தெரியும். வை.."

-மறுமுனை முடங்கியது. வரதன் ரிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தான். வெளியே வந்தான். ராமு யார் வீட்டுக்கோ தண்ணீர்க் குடம் சுமந்து கொண்டிருந்தான்.

***

**பே**ப்பர் வந்து விட்டிருந்தது.

ஆவலாக வாங்கிப் பார்த்தான் வரதன். அதில் ஒரு மூலையில் விளம்பரம் ஒன்று.

'அன்புள்ள மிஸ்டர் பிளாக். நான் உங்கள் நண்பன் சாம்கிரேட் மேன் பேசுகிறேன். நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. உங்களை சந்தித்து பல வருடங்கள் ஆகி விட்டது. சந்திக்க விரும்புகிறேன். தயவு செய்து இந்த விளம்பரம் பார்த்து என்னை ஹோட்டல் மேலகாவில் ரூம் நம்பர் நானூறில் தொடர்பு கொள்ளவும். நமது குருகுல அனுபவங்களை எல்லாம் மறக்க முடியாது.

இப்படிக்கு சாம் கிரேட்மேன்'

-விளம்பரத்தை படித்தவுடன் அதில்

தனம்தான்.

"இந்த சிரஞ்ஜீவிதான் எத்தனை பெரிய இல்லாடி! மனதுக்குள் பாராட்டுப் பத்திரம் வாசித்தான்.

பேப்பரை சுருட்டிக் கொண்டு வெளியேறும் போது நிறைய பேர் கருப்பசாமி தாத்தாவை பார்க்க போய்க் கொண்டிருந்தார்கள்.

எல்லோர் இடுப்பிலும் தோளிலும் குழந்தைகள்.

சிரிப்பு வந்தது.

'ஹைடெக்' யுகத்தில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே என்று நினைத்துக் கொண்டான். தாத்தாவும் இப்பொழுதெல்லாம் அவன் மேலும் கவனமாக இருப்பதால் அவனை கைதட்டிக் கூப்பிட்டார்.

அரைமனதாக அவரை நோக்கிச் சென்றான்.

"வா வரதா..."

"எதுக்கு கூப்பிட்டீங்க?"

"சும்மாதான்... ஆமா உடம்பு கிடம்பு சரியில்லையா உனக்கு?"

"இல்லையே..."

"பார்த்தா அப்படி தெரியலையே... ரொம்ப டல்லா இருக்கியே."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. நான் வரேன்."

"சரி... அது என்ன கைல பேப்பரா?"

"ஆமாம்..."

"படிச்சுட்டியா...?"



"எதுக்கு உங்களுக்கு வேணுமா?"

"கொடேன். பாத்துட்டு தரேன்."

"பேப்பர் படிக்கக்கூட நேரமிருக்கா... இங்க ஒரே கூட்டமா இருக்கே..."

"இவங்கள்ளாம் போன பிறகு படிச்சுட்டு போறேன்."

-தாத்தா விடாமல் வளைத்தார். அவனும் அரை மனசாக பேப்பரைக் கொடுத்து விட்டு விலகினான்.

விலகியவன் எதிரே காய்கறிக் கூடையோடு வந்து கொண்டிருந்த ராமுவைத்தான் பிடித்தான்.

"டேய் ராமு கொஞ்சம் என்கூட வாடா..."

"எங்கண்ணே...?"

"வாடான்னா..."

-ராமு காய்கறிக் கூடையை உரிய வீட்டில் கொடுத்து விட்டு ஃபாலோ செய்தான். பார்த்துக் கொண்டே இருந்தார் தாத்தா!

***

**மா**லை நேரம்...

அபார்ட்மெண்ட் குழந்தைகள் 'கொல கொலையா முந்திரிக்கா' விளையாட்டில் மூழ்கியிருந்தனர்.

ராமு வந்து கொண்டிருந்தான்.

தாத்தா ஃப்ளாட் வாசலில் ஈஸிசேரில் மல்லாந்திருந்தார்.

கூப்பிட்டார்.

"என்ன தாத்தா?"

"எங்க போய்ட்டு வரே..."

"வரதண்ணனோட வெளிய போய்ட்டு வந்தேன் தாத்தா."

"அதான் எங்கேன்னு கேட்டேன்."

-ராமு பதில் சொல்லாமல் முழித்தான்.

"கேட்கறேன்ல.."

"தெரியல தாத்தா.."

"தெரியலையா?"

"ஆமாம். எங்க போனேன். என்ன பண்ணினேன் எதுவும் ஞாபகத்துல இல்லை.."

"அது எப்படி ஞாபகத்துல இல்லாம போகும்..?"

"இல்ல தாத்தா... சத்தியமாதான் சொல்றேன்."

-தாத்தா அவனை பரிதாபமாகப் பார்த்தார். அவனிடம் வாயிலிருந்து கொட்டாவி பிரிந்தது.

"தூக்கம் வருதா?"

"ஆமாம்... படுத்தா நாலு நாளைக்கு எழுந்திரிக்க மாட்டேன்."

"சரி போய் படு.. போ!"

-அவனும் விலகிப் போனான். மாடிப்படி அருகே போய் வால் போஸ்டர்களை விரித்து உலகம் சுற்றும் வாலிபன் எம்.ஜி.ஆர்.மேல் படுத்துக் கொண்டான்.

அப்படியே தூங்கியும் போனான்.

தாத்தா அவனை பார்த்து முடித்து விட்டு பேப்பரை விரித்தார். விளம்பரம் கண்ணில் பட்டது. ஆச்சரியம் முகத்தில் ரேகைகளாக ஓடியது. கருப்புசாமி என்கிற தன் பெயரை தன்



வசதிக்கு பிளாக் என்று மாற்றியது கிரேட் மேன்தான்!

"ஓ.. சாம் கிரேட் மேன் நீ இன்னும் இருக்கியா?" -உதடு உற்சாகமாக கூவியது. அப்பொழுதே லேகா ஓட்டலுக்கு புறப்பட்டு விட்டார்.

மாடிப்படியை விட்டு இறங்கி ராமுவைப் பார்த்துக் கொண்டே நடந்தவரை அவனது தூக்கத்து உளறல் தடுத்து நிறுத்தியது.

"சரிண்ணே... நீங்க சொல்றபடி கேக்கறேண்ணே, கேக்கறேண்ணே.. எனக்க எதுவும் தெரியா துண்ணே... எனக்கு எதுவும் தெரியா துண்ணே.."

-அவன் உளறலைக் கேட்டுக் கொண்டே நடந்தார்.

"எங்க தாத்தா கிளம்பிட்டீங்க?"

-ஹெல்மெட்டும் கையுமாக வந்த குண்டு பிரசாத் சௌஜன்யமாக கேட்டபடி கடந்து போனான்.

அன்று பால்கனியில் விழப் பார்த்த குழந்தைக்கு அப்பன் அவன்.

"டேய் பிரசாத் இங்க வா.." வந்தான்.

"நீ டூ வீலர் வெச்சிருக்கேதானே..?"

"என்ன கேள்வி தாத்தா. கைல இரும்புச் சட்டி வெச்சுருக்கேனே. பார்த்தா தெரியல."

"எனக்கு ஒரு உபகாரம் பண்ணு."

"என்ன தாத்தா?"

"ஹோட்டல் லேகா வரைக்கும் நான் போய் வரணும், கொஞ்சம் கூட கூட்டிகிட்டு போறியா..?"

"தாராளமா... அன்னிக்கு நீங்க இல்லேன்னா என் குழந்தை அவ்வளவுதான்."

"அதுக்காக இந்த உதவியை நான் கேக்கலே. எனக்கு ஒரு அவசரம். அதுதான்..."

"ஒரு நிமிஷம் இருங்க... வந்துட்றேன்."

குண்டு பிரசாத் போன வேகத்தில் திரும்பி வந்தான். சட்டை மட்டும் மாற்றியிருந்தான். தாத்தாவை பின்னால் ஏற்றிக் கொண்டு பைக்கில் சீறினான்.

***

**ஹோ**ட்டல் லேகா.

ரூம் நம்பர் 400.

'டொக்... டொக்...' -தாத்தா கதவைத் தட்ட கதவும் திறந்து கொண்டது. உள்ளே வெள்ளை பைஜாமா ஜிப்பாவில் நெற்றியில் பெரிய சந்தனப் பொட்டோடு ஆனந்தமார்கிகள் போன்ற தலைப் பாகையுடன் சிரஞ்ஜீவி.

"இங்க சாம் இல்ல..."

"உள்றவாங்க. நீங்க..."

"நான் அவர் நண்பர். அவர் கொடுத்த விளம்பரத்தைப் பார்த்துட்டு வந்துருக்கேன்."

"ஓ. நீங்கதான் மிஸ்டர் பிளாக்கா...?"

-சிரஞ்ஜீவி பக்குவமாய் விசாரித்தபடி உள்ளே அழைத்து கதவையும் மூடினான்.

"நீ யாருப்பா...?"

"நான் சாமோட வளர்ப்பு மகனோட மகன். அதாவது பேரன்."

-தாத்தா வியப்பாக பார்த்தார்.



"சாம் வளர்ப்பு மகனெல்லாம் வெச்சிருந்தாரா?"

"ஆமாம்... அவர் கடைசி காலத்துல தனக்கு ஒரு துணை வேணும்னு என் அப்பாவை அவர் வளர்ப்பு மகனா ஏத்துகிட்டார்."

"அப்ப சாம் இப்போ...?"

"அவர் இப்ப உயிரோட இல்ல. பாஸ் அவே!"

"அப்ப விளம்பரத்துல..."

"நான்தான் கொடுத்தேன். உங்களை கண்டு பிடிக்கிறதுக்காக..."

"என்னை கண்டுபிடிக்கவா?"

"ஆமாம்... தாத்தா நிறைய புத்தகம் எழுதியிருக்கார். அதை உங்க மூலமா இந்த உலகம் தெரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டார்."

-சிரஞ்ஜீவி சாம் கிரேட் மேனின் டயரியையும், மற்றுமுள்ள புத்தகங்களையும் போய் எடுத்து வந்து அவர் முன்னால் வைத்தான். 'ஒரு நிமிஷம்' என்றபடி தாத்தாவின் காலில் விழுந்து நமஸ்கரித்தான். தாத்தா புத்தகங்களைப் புரட்டினார்.

"ஓ... சாம்!" - என்று உணர்ச்சி வசப்பட்டார். ஒரு பக்கமாய் கையைக் கட்டிக் கொண்டு மிகப் பணிவாக அவரையே பார்த்தபடி நின்றான் சிரஞ்சீவி.

தாத்தா புத்தகங்களை, டயரியை மூடியபடி அவனை ஏறிட்டார். சந்தேகம் அது இது என்று எதுவுமில்லாத வாஞ்சை மிகுந்த பார்வை பார்த்தார்.

"என்னை மன்னிக்கணும் நான் அவர்

பேர்ல விளம்பரம் கொடுத்ததுக்காக..." - சிரஞ்சீவி பவ்யமாக பேசினான்.

"பரவால்ல... இல்லேன்னாலும் என்னை பார்த்திருக்க முடியாது நீ..."

"தாத்தா இப்ப என்ன பண்றீங்க?"

"என்ன பண்ணுவேன். என்னால முடிஞ்ச சர்வீஸை பண்ணிகிட்டிருக்கேன்."

"யூமீன். ஏதாவது ஆஸ்ரமம் வெச்சு யோகா கத்துக் கொடுக்கறீங்களா?"

"இல்ல... சும்மா குழந்தைகளுக்கு வர்ற தோஷங்களை தடுத்துகிட்டிருக்கேன். எனக்கு உன் தாத்தாவுக்கு தெரிஞ்ச அளவு யோக மெல்லாம் தெரியாது."

"தெரியும்... அதுவும் இல்லாம உங்களுக்கு நேத்திரக்களரியும் தெரியுமாமே..." - சிரஞ்சீவி கச்சிதமாய் விஷயத்துக்கு வந்தான். தாத்தா சிலிர்த்தபடி அவனைப் பார்த்தார்.

"உன் தாத்தா சொன்னாரா?"

"சொல்லுமா... இந்த டயரியிலேயே எழுதியிருக்காரே..."

-தாத்தா அதற்கு பதில் சொல்லாமல் மௌனமாக எங்கோ பார்த்தார்.

"என்ன... நான் தப்பா ஏதாவது பேசிட்டேனா?"

"இல்ல... இந்த மாதிரி விஷயங்களை குருகுலத்துலையிலேயே நாங்க ரகசியமாதான் கத்துகிட்டோம். சாகறவரை அது வெளிய தெரியக்கூடாதுங்கறதுதான் எங்க கொள்கையே..."

" [illegible]



போயிடாதா?"

"போகாது. நான் எனக்கு பிறகு யாருக்காவது ஒருத்தருக்கு ஒரே ஒருத்தருக்கு அதை சொல்லிக் கொடுத்துட்டுதான் செத்துப் போவேன்."

"ஒருத்தருக்கு மட்டும் தெரிஞ்சா போதுமா?"

"ஓராயிரம் பேருக்கு கத்துக் கொடுக்க அது ஒண்ணும் சிலம்பமோ வர்மமோ இல்லை. நேத்திரக்களரி ஒரு ராஜ யோகக்கலை. அசகாய சூரனைக் கூட அதன் மூலமா ஒரு பார்வைல வீழ்த்திடலாம். அப்படி ஒரு விஷயம் ஒரு நபருக்கு தெரிஞ்சிருக்கறது கூட ஆபத்துதான். அந்த நபர் அதை நல்ல விஷயத்துக்கு மட்டுமே பயன்படுத்தணும். தப்பித் தவறி அதை அரசியல் சூதாட்டத்துக்கு பயன்படுத்தத் தொடங்கினா இந்த உலகத்துல அப்புறம் எல்லா தலைவர் களும் யாரையும் சந்திச்ச பேசி செயல்பட மாட்டாங்க. ஒளிஞ்சுக்கற ஒரு அபாயம்தான் ஏற்படும்."

"இது உங்க கற்பனையா இல்லை எச்சரிக்கையான்னு தெரியலை. ஆனா தாத்தா அதை எனக்கு கத்துக் கொடுக்க விரும்பினார். ஆனா அதுக்குள்ள இறந்து போயிட்டார்..."

"அப்படியா... சாம் உனக்கு கத்துக் கொடுக்க விரும்பினாரா?"

"ஆமாம்... நீங்க நினைக்கற அந்த ஒரு மனுஷனா தாத்தா என்னை நினைச்சாரோ என்னவோ எனக்கு ஹிப்னாடிசம், மெஸ் மரிசம், எல்லாம் சொல்லிக் கொடுத்தார்."

"அது தெரிஞ்சாதான் நேத்திரக்களரி

வசப்படும்."

"நான் அதை கத்துகிட்டு எனக்குள்ள வெச்சு பாதுகாக்க விரும்பறேன். நல்ல காரியங்களுக்கும் பயன்படுத்த விரும்பறேன்."

-சிரஞ்ஜீவி பக்குவமாக தன் ஆசைக்கு வந்தான். ஆனால் தாத்தா உடனே சம்மதம் சொல்லாமல் "நான் யோசிச்சு சொல்றேன்." - என்றார். சிரஞ்ஜீவியும் "இதெல்லாம் நம்பிக்கை அடிப்படைல நிகழணும். உங்க விருப்பப்படியே செய்யுங்க. நான் தகுதி இல்லைன்னு நினைச்சா விட்டுடுங்க. ஆனா யாராவது ஒருத்தருக்காவது அதை கத்துக் கொடுக்காம விட்டுடாதீங்க." என்றான். நடுவில் பேசிக் கொண்டே சுக்கு மல்லிக் காபி போட்டு எடுத்து வந்து தந்து உபசரித்தான். தாத்தா கை நீட்டி வாங்கும் போது கொஞ்சம் இடறியது. அவ்வளவு காபியும் ஜிப்பாவில் கொட்டி கரையாகிப் போனது.

"ஓ... ஐ ஆம் சாரி, என்னை மன்னிச்சுடுப்பா.." என்று தாத்தா வருத்தப்பட்டார்.

"பரவால்ல தாத்தா" - என் மிக பணிவாக சொல்லிவிட்டு அந்த ஜிப்பாவை தாத்தா எதிரில் கழட்டினான்.

இரு தோளிலும் சங்கு சக்கரத் தழும்புகள் தெரிந்தன.

"அது என்ன சங்கு சக்கரம்?"

தாத்தா கேட்டார்.

"நான் பிராமண வகுப்பை சேர்ந்தவன். எங்க வகுப்புல இப்படி முத்திரை குத்திக்கறது வழக்கம். இது ஒருவித ஆச்சாரம்."

தாத்தா அதைக் கேட்டு பரவசம் கொண்



டார். அதன்பின் நெடுநேரம் அங்கே இருந்துவிட்டுத்தான் புறப்பட்டார். வெளியே வந்து ஆட்டோவில் ஏற்றிவிட்ட பிறகுதான் அவரை விட்டே நீங்கினான் சிரஞ்ஜீவி.




## ஜனவரி - 9 - 1906

உலகம் முழுக்க நிகரற்ற யோக வித்தை தெரிந்த யோக ராஜர்கள் எப்பொழுதுமே நூற்றி எட்டு பேர்தான் இருப்பார்களாம். ஒருவர் உயிர் நீக்கும் போது இன்னொருவர் அந்த இடத்திற்கு வந்து விடுவார்கள். எத்தனை கோடி மக்கள் இருந்தாலும் நூற்றிஎட்டு யோக ராஜர்கள் மட்டுமே தொடர்ந்து இருப்பார்கள் என்பது எனக்கு ஆச்சரியம் தந்தது. ஒரு கட்டத்தில் இந்த நூற்றிஎட்டு பேரில் நானும் ஒருவனாக மாறியதுதான் ஆச்சரியம்.

***

## சாம் கிரேட்மேன்
## டயரிக்குறிப்பிலிருந்து.

வீட்டுக்கு திரும்பிய கருப்பசாமி தாத்தா ஏக சிந்தனையில் இருந்தார்.

தனக்கு பிறகு தனது யோக விலாசத்தை

யாராவது ஒருவருக்கு கற்றுக் கொடுத்து விட்டுத்தான் மரணிக்க வேண்டும்.

அப்படி தான் கற்றுக் கொடுக்க விரும்பும் நபர் ராமுவை போல பொது நல ஊழியனாக பொய் பேசாதவனாக இருக்க வேண்டும் என்பது அவர் ஆசை.

இறுதியாக ராமுவுக்கே தான் நினைத்த படி தனது வித்தைகளை கற்றுத் தந்து விடத்தான் ஆசைப்பட்டார்.

அப்பொழுதுதான் வரதன் போன்ற மனித நரிகளிடம் இருந்து அவன் தப்பித்து வாழ முடியும் என்பதும் அவர் அந்த முடிவிற்கு வர காரணம்.

அதனால்தான் அவனை கூப்பிட்டு அன்று வெந்நீரில் குளிக்க வைத்து எதிரில் அமரச் செய்து தன் கண்களால் அவனை உற்றுப் பார்க்க ஆரம்பித்தார்.

ஒரு வகையில் அவன் தூங்கி வழியவும் அவர்தான் காரணம்.

ராமுவை நினைத்துக் கொண்டு அவன் எங்கிருந்தாலும் அவன் உணர்வுகள் தூங்க வேண்டும் என்று டெலிபதி மூலம் மனதை ஒருமுகப்படுத்தி அஞ்சல் செய்து ஒரு பரி சோதனை செய்து பார்த்தார். அது நல்ல விதமாக ஒர்க் அவுட்டாகி அவரது அஞ்சல் அலைகளை அவனது உடம்பு ஸ்வீகரித் திருந்தது.

அன்றே அவனை சிடனாக்கி தன் வித்தைகளை சொல்லிக் கொடுத்து விடுவது என்கிற முடிவுக்கு வந்து விட்டார்.

இல்லாவிட்டால் வரதன் அவனிடம்



இருந்து ஒரு கிட்னியை உருவிக் கொண்ட மாதிரி பல விஷயங்களில் அவனை ஏய்க்கலாம் என்பதும் ஒரு காரணம்.

ஆனால் இப்பொழுது சாம் பேரன் என்கிற ஹோதாவோடு சிரஞ்ஜீவி குறுக்கில் வருகிறான்.

இவர்களில் யாரைத் தேர்ந்தெடுப்பது?

ராமுவுக்கு சொல்லிக் கொடுத்தால் அவன் தன்னை தற்காத்துக் கொள்வான். சிரஞ்ஜீவிக்கு சொல்லிக் கொடுத்தாலோ அவன் மிகுந்த புத்திசாலி -வேகமாக கற்றுக் கொள்ளும் வாய்ப்பு அவனுக்கு அதிகம். யாருக்கு கற்றுத் தருவது...? எது இந்த உலகுக்கு மிகவும் பயன்படும்?

யோசனையில் விழுந்தவர் அப்படியே தூங்கிப் போனார்.

***

**ம**றுநாள்

ராமுவைப் பார்த்தபோது தாத்தாவுக்கு ஆச்சரியமாகிப் போனது.

அவன் ஒருவெள்ளை ஜிப்பாவில் மாறுதலாக தெரிந்தான். கேட்டதற்கு வரதன் தந்ததாக கூறினான்.

ஜிப்பாவில் தெரிந்த கரை அதை கூர்ந்து பார்க்கச் செய்தது. முதல் நாள் சிரஞ்ஜீவியைப் பார்த்தபோது அவன் போட்டிருந்த ஜிப்பா போலவே இருந்தது. அருகே சென்று முகர்ந்து பார்க்கவும் அதில் சுக்குமல்லி வாடை தூக்கி அடித்தது. அதைத் தொடர்ந்து.

“ராமு கொஞ்சம் உள்ளவா...” என்று

அவனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

"என்ன தாத்தா..?"

"இதை வரதனா தந்தான்."

"ஆமாம் தாத்தா... என் சட்டை கிழிஞ்சு போச்சு. அதைப் பார்த்துட்டு இதை தந்தார்."

"இது ஏது அவனுக்கு..?"

"தெரியலை. இந்த மாதிரி நிறைய துணிங்க வரதண்ணன் கிட்ட இருக்கு."

"வரதன் பத்தி வேற என்ன தெரியும் உனக்கு?"

"என்ன தாத்தா கேள்வி இது..."

"கேட்டதுக்கு பதில் சொல்லு..."

"அண்ணே நல்லவரு... அவ்வளவுதான் எனக்குத் தெரியும்."

"வேற எதுவும் தெரியாது."

"இப்பல்லாம் எனக்கு பல விஷயங்கள் ஞாபகத்துக்கு வர மாட்டேங்குது. எனக்கு எதுவும் தெரியாது... எனக்கு எதுவும் தெரியாதுங்கற வார்த்தைதான் எனக்குள்ள ஓடிகிட்டே இருக்கு."

"அப்படியா?" - கேட்டபடி எழுந்தவர் ஒரு சங்கிலியில் தொங்கும் இரும்புக் குண்டோடு வந்து அவன் எதிரில் சுழற்ற ஆரம்பித்தார். ராமுவின் கவனமும் அதில் போயிற்று. நெற்றி சுருங்கி அவசரமாக காதுகளைப் பொத்திக் கொண்டு "தாத்தா அதை சுத்தாதீங்க...எனக்கு தலையை வலிக்குது..." என்றான்.

அவரும் அதை பெரிதாக சுற்றுவதை நிறுத்தி விட்டு மெல்ல கெடிகார பெண்டுலம்



போல இடவலமாக ஆட்ட ஆரம்பித்தார்.

ராமு நிதானமாக அதையே பார்த்தவன் "தாத்தா... தாத்தா... தா..." என்று மெல்ல வார்த்தைகள் தேய சொற்களை இழந்தான்.

"என்னைப் பார் ராமு?"

-பார்த்தான்.

தாத்தா புருவங்களை விரித்துக் கொண்டு அவனை பார்த்த விதமும், அந்த கண்களும் அவனை என்னவோ செய்தது..!

அவன் இப்பொழுது தன்னையே மறந்தவனாக தாத்தாவின் கேள்விகளுக்கு பதில் சொல்ல ஆரம்பித்தான்.

"ராமு..."

"நான் ராமு இல்ல. என் பேர் வித்யாகர்."

"வித்யாகர் ஏன் உனக்கு எதுவும் தெரியாது?"

"ஆமாம் எனக்கு எதுவும் தெரியாது."

"அதுதான் ஏன்?"

"எதுவும் எனக்கு தெரியக்கூடாது. நான் விழித்திருக்கும்போது எதையும் நான் யோசிச்சு பார்க்கக்கூடாது. எனக்கே நான் என்ன செய்தேன்கறது தெரியக்கூடாது இல்லையா. அதனால்தான்."

"நீ என்ன செய்யப் போறே?"

"வர்ற பதினைந்தாம் தேதி மந்திரி மகாதேவனை உருத் தெரியாம சொல்லப் போறேன்."

"ஏன்?"

"அது என் இயக்கத் தலைவர் கட்டளை."

"யார் அது உன் தலைவர்?"

"தெரியாது. ஆனா என்னை இயக்கற தலைவர் சிரஞ்சீவி."

"இதுல உனக்கு சம்மதமா?"

"பரிபூரண சம்மதம். முழுச் சம்மதம். மந்திரி மகாதேவன் மாதிரி ஊழல் பெருச்சாளிகள் இறந்தால் இந்த ஊர் நல்லா இருக்கும். இந்த ஊர் நல்லா இருக்க நான் தியாகம் செய்யப் போறேன்!"

"இதுல வரதனோட பங்கு என்ன?"

"அவன்தான் என்னை சிரஞ்சீவி கிட்ட கூட்டிகிட்டு போனது..."

"சரி உனக்கு உன் கிட்ட இருந்து கிட்னி எடுக்கப்பட்டது தெரியுமா?"

"தெரியாது."

"சரி ராமு..."

"நான் ராமு இல்ல. வித்யாகர்..."

"நீ இனி வித்யாகர் இல்ல. ராமு. அதைத் தெரிஞ்சுக்கோ."

"அப்படியா?"

"ஆமாம். நீ வித்யாகர் இல்ல ராமு. உன் உண்மையான குரு பேர் கருப்பசாமி தாத்தா."

"சரி."

"உன் மனசுல பதிய வெச்சுக்கோ. உன் குரு பேர் என்ன?"

"கருப்பசாமி தாத்தா."

"சரி நீ தூங்கு..."

"தூங்குறேன்... தூங்கறேன்.. ங்கறேன்... கறேன்.. ன்...!"



-ராமு அப்படியே தன்னை மறந்து படுத்தான்.

தாத்தா சிந்தனையோடு எழுந்தார். குருப் போட்டோவைப் போய் பார்த்தார். அதில் குருநாதர் நடுவில் அமர்ந்திருந்தார்.

நிஜமான சத்யமான யோகிகளை யாரும் ஏமாற்ற முடியாது. அப்படி ஏமாற்ற முயன்றால் ஏதாவது ஒரு விஷயம் வந்து காட்டிக்கொடுத்து விடும். இது சத்தியம்' -என்று அவர் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

வெளியே மழை தூறல் ஆரம்பித்தது.

வேஷம் கலைத்த சக்குமல்லி காபிக்கு மழையும் நன்றி சொன்னது.

சிரஞ்சீவி திட்டம் போட்டுத்தான் தன்னை தேடி இருக்கிறான். எப்படியோ சாம் கிரேட்மேனின் டயரியும் மற்ற புத்தகங்களும் அவன் வசப்பட்டிருக்கிறது.

அது தன்னை சந்தித்து பேசி 'நேத்திரக் கனரி'யை பற்றி அவன் தெரிந்து கொள்வது வரை பாதை போட்டிருக்கிறது.

நல்லவேளை...

இப்பொழுதாவது உண்மைகளை தெரிந்து கொள்ள முடிந்ததே.

எல்லாம் குருநாதர் ஆசிர்வாதம்.

இல்லாவிட்டால் அந்த இடத்தில் சக்குமல்லிக் காபி கை தவறிக் கொட்டுமா... அதுவே ஒரு அடையாளமாகி இப்பொழுது எல்லாம் சதிவேலை சம்பந்தப்பட்டதுதான் என்பதை புரிய வைத்திருக்குமா. அனேகமா ஏதாவது ஒரு சித்த புருஷரின் அக்மார்கூட

இதை செய்திருக்கலாம்.

எப்படியோ உண்மை தெரிந்து எச்சரிக்கை பிறந்து விட்டது.

இனி...?




## ஜனவரி – 10 – 1906

'முதலில் பூர்வ புண்ணியம் நமக்கு இருக்க வேண்டும். இருந்தால். சித்தம் வசப்படும். சித்தர்கள் வசப்படுவார்கள். அடுத்து உண்மையும் பொறுமையும் நிறைய இருக்க வேண்டும். இருந்தால் சித்த ரகசியங்களை நாம் கற்க முடியும்.

அதை கற்றுக் கொள்வது எல்லாம் எனக்கு தெரியும் என்று பெருமைப்பட்டுக் கொள்வதற்காக இருக்க கூடாது. அது இந்த உலகிற்கு அருளப்பட்டது. நம்மிடம் அது தங்கியிருக்கிறது என்று நினைக்க வேண்டும்.

இதனாலேயே சித்தர்கள் சம்மந்தப்பட்ட விஷயங்கள் சமூகத்தில் நம்ப முடியாத புராண கதைகளைப் போல கருதப்படுகிறது. அப்படி அவர்கள் கருதுவதே சித்தத்திற்கும் பலம். எவரும் போற்ற வேண்டும். வியக்க வேண்டும் என்பதற்காக தோன்றியதல்ல சித்தம். அது இந்த உலகில் மனித



சக்தியின் உச்சத்தை அடையாளம் காட்டுவதற்காக உள்ள ஒரு தனிப் பெரும் சக்தி.

அதுதான் நம்மை இயக்கும். நம்மால் அதை எதுவுமே செய்ய முடியாது.

***

## சாம் கிரேட்மேன் டயரிக்குறிப்பிலிருந்து.

சிரஞ்ஜீவி ஆளே உருமாறியிருந்தான்.

காக்கி பேண்ட், சட்டை கையில் ஒரு ஸ்க்ரூ டிரைவர் டெய்ஸ்ட்டர், லைட். தலையில் கருப்பு தலைப்பாகை. வரதன் ஃப்ளாட்டின் கதவைத் தட்டினான். திறந்து கொண்ட கதவுக்கு பின்னால் வரதன். வரதனுக்கே முதலில் அடையாளம் தெரியவில்லை. தலையில் கருப்பு தலைப்பாகையை பார்க்கவும்தான் ஞாபகம் வந்தது.

"நீ..."

"சிரஞ்ஜீவி வரதா... அடையாளம் கண்டுபிடிக்க முடியலியாக்கும்?" - மிதப்பாக கேட்டபடி உள்ளே வந்தான்.

வரதன் கதவை மூடப் போனான்.

"மூடாதே... திறந்தே இருக்கட்டும்..." என்ற சிரஞ்ஜீவி வெளியில் நிலைக்காலுக்கு மேல் இருக்கும் வராண்டா லைட்டை கழட்ட ஆரம்பித்தான். பார்ப்பவர்கள் பழுது நீக்குவதற்காகவே வந்திருப்பதாக நினைக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு நன்றாகவே வேலை செய்தது.

"என்ன வாசல் லைட் எரியலையாக்கும்?"

-என்று கேட்டபடி கடந்து போனது பக்கத்து வீட்டு கிழடு.

"ஆமாம் தாத்தா..." -என்ற வரதனை சிரஞ்சீவியும் நக்கலாகப் பார்த்தான்.

பிறகு உள்ளே வந்தான். வெளியே பார்வையை வைத்துக் கொண்டு கடகட வென்று பேசத் தொடங்கினான்.

"வரதா ராமு கண்ட்ரோல்லதானே இருக்கான்"

"ஆமாம் சிரஞ்சீவி..."

"செதப்பலா எதுவும் பண்ணிட மாட்டானே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. அதான் அவனுக்கு எதுவும் தெரியாதுங்கற எண்ணத்தை நீ நல்லா பதியம் போட்டு விட்டுருக்கியே..."

"குட்... நாளைக்கே அவனுக்கு மொட்டை போட்டுரு. ஒரு டோப்பாவை வாங்கிக் கொடுத்து இடுப்புல பாமைக்கட்டித்தான் விழாவுக்கு அனுப்பப் போறோம். குண்டு வெடிச்சு சிதறும்போது டோபா எகிறிப் போய் விழுந்து கருகிடணும். மொட்டைத் தலையோடதான் இவன் கிடைக்கணும். அப்படி கிடைச்சாலும் வந்தது இவன் இல்லைன்னு போலீஸ் நினைச்சு குழம்பணும்."

"எல்லாம் சரி... முகமே எரிஞ்சு கருகிப் போயிட்டா."

"நமக்கு ரொம்ப சௌகர்யமா போயிரும்."

"அப்ப அப்படி ஆகறதுக்கு வழி இல்



லையா."

"இடுப்புல அவன் கட்டிகிட்டு போற அது வெடிக்கறதை பொருத்து இருக்கு."

"சரி இதைச் சொல்லத்தான் வந்தியா?"

"இன்னொரு விஷயமும் இருக்கு."

"என்ன?"

"மிஸ்டர் பிளாக்குங்கற அந்த கருப்ப சாமியைக் கண்டுபிடிச்சிட்டேன்."

"அப்படியா... பேப்பர் விளம்பரம் ஒர்க் அவுட்டாயிடிச்சு இல்லையா?"

"ஆமாம்... இவ்வளவு சீக்கிரம் அது ஒர்க் அவுட்டாகும்னு நான் நினைக்கவேயில்லை."

"அப்ப அடுத்த குறி அவரா...?"

"ஆமாம்... அவர்கிட்ட சிஷ்யனா சேர்றது ஒண்ணும் சாதாரண விஷயமில்ல. மனுஷன் எமகாதகன். நம்மை ஒரு மில்லிமீட்டர் அளவு கூட தப்பா நினைக்க இடம் கொடுத்துடக் கூடாது. கொடுத்தா அவ்வளவுதான்."

"என்னாகும்?"

"நேத்திரக்களரி உன்னையும் என்னையும் எது வேணுமானாலும் செய்யும். பார்த்த மாத்திரத்துல நம்மை அந்த மனுஷர் ஒருத்தரை ஒருத்தர் கழுத்தை நெறிச்சுக் கொல்லும்படி கட்டளை இடலாம். நாமளும் அதை செய்து முடிச்சு செத்துப் போயிடுவோம்."

"பயங்கரமா இருக்கே...?"

-வரதன் ஆயாசிக்கும்போது தாத்தாவே வெளியில் நடந்து வந்து கொண்டிருந்தார்.

கதவு திறந்து கொண்டிருப்பதைப் பார்த்து

உள்ளே எட்டிப்பார்த்தார். அவர் பார்ப்பது தெரியவும் சிரஞ்ஜீவிக்கு குபீர் என்று வியர்த்தது.

வரதன் தாத்தா பார்ப்பதை அறிந்து வெளியே போய் விசாரிக்கலானான்.

"என்ன தாத்தா பாக்கறீங்க?"

"கதவு திறந்திருக்கே இருக்கையான்னு பார்த்தேன்."

"இல்லாமதான் வந்து விசாரிக்கிறேனாக்கும்?" இடக்காக பதில் கூறி அனுப்பிவிட்டு உள்ளே வந்தான். சிரஞ்ஜீவி செத்துப் பிழைத்த மாதிரி வரதனைப் பார்த்தான்.

"என்ன சிரஞ்ஜீவி எதுக்கு இப்படி வேர்த்திருக்கு?"

"வேர்க்காம... அவர்தான் நான் சொன்ன மிஸ்டர் பிளாக்!"

"என்னது இந்த தாத்தாவா?"

"இவரேதான். எங்க இங்க என்னை மோப்பம் பிடிச்சுகிட்டு வந்துட்டாரோன்னு நினைச்சு மிரண்டு போயிட்டேன்."

"அடக்கண்றாவியே... இவர்தானா அது? - வரதனுக்கு குபீர் என்று வியர்த்தது.

"ஆமா இவர் இந்த ஃப்ளாட்லதான் குடி இருக்காரா...?"

"ஆமாம்."

"நல்லவேளை என்னை பாக்லை. நானும் மாறுவேஷத்துல இருக்கேன். ஜாக்கிரதை வரதா."

"கவலைப்படாதே. தாத்தாவோட எனக்கு



நல்ல பழக்கம் உண்டு. ஆனா எப்பப்பார் மோதிப்போம். இனி நான் தாத்தாவை ஒரு கடவுளாக்கி நானும் அவர் பக்தனாயிட்றேன்."

"ரொம்ப கவனமா செயல்படு. ஓவர் ஆக்ட் பண்ணி கெடுத்துடாதே. ஐய்யோ அப்பா... கைல வெண்ணெயை வெச்சுகிட்டு நெய்க்கு அலைஞ்ச கதையால்ல இருக்கு."

"கவலையே படாதே. இனி தாத்தாவை அங்குலத்துக்கு அங்குலம் அசத்தறதுதான் என் வேலை."

"அதெல்லாம் பிறகு... முதல்ல ராமுவை தயார் பண்ணணும். ஞாபகம் இருக்கட்டும். நான் கிளம்பறேன்."

"நல்லது... ஜாக்கிரதையா போய்ட்டுவா." - வரதன் சிரஞ்ஜீவியை வழி அனுப்பிவிட்டு தாத்தாவின் பிளாட்டை எட்டிப் பார்த்தான்.

அவர் வெளியே ஈஸிசேரை போட்டுக் கொண்டிருந்தார்.

'தாத்தா... எத்தனை பெரிய ஆளுய்யா நீ. எவ்வளவு சாதாரணமா இருக்கே இங்க... இது தெரியாம நான் உன்கிட்ட மோதிகிட்டே இருந்துட்டேனே...!'

வரதன் மனதில் சன்னமாய் வருத்தம். அதை சரி செய்து கொள்ள வேண்டி தாத்தாவை நோக்கி நடந்தான். எதிரில் போய் நின்றான்.

"வாலே... என்ன விசயம்?"

"மனசே சரியில்ல தாத்தா."

"அதுக்கு நான் என்ன பண்ணணும்?"

"உங்ககிட்ட பேசிட்டிருந்தா கொஞ்சம்

ஆறுதலா இருக்கும்னு தோணிச்சு."

"என்ன குல்லாவெல்லாம் பயங்கரமா இருக்கு"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. தப்புத் தப்பா ஏதேதோ பண்ணிட்டேன். மனசுல இப்ப குற்ற உணர்ச்சிங்க குத்துது. நான் திருந்தி இனி நல்லவிதமா இருக்கணும்."

"அப்படி என்ன தப்பு பண்ணினே நீ?"

"எவ்வளவோ... எதைன்னு சொல்ல?"

"சரி இப்ப வருத்தப்பட்றேல்ல..."

"நிச்சயமா தாத்தா... எனக்கு நல்ல மன பலத்தை கொடுங்க."

"நான் என்ன சாமியா... உனக்கு நல்ல மனபலத்தை கொடுங்க."

"நான் என்ன சாமியா... உனக்கு அதை எல்லாம் தர...?"

"என் வரையில நீங்க அதுக்கெல்லாம் மேல." - அவன் பதில் தாத்தாவை ஒரு வினாடி அவனை எடைபோடும் விதமாக பார்க்க வைத்தது.

'நாம் இவனையும் இவன் கூட்டாளி களையும் தெரிந்து கொண்டது போல இவனும் தெரிந்து கொண்டு விட்டானா...?' - சந்தேகம் வந்தது.

தாத்தா போன்ற சித்த புருஷர்களும் சந்தேகம் வந்தால் அதை தீர்த்துக் கொள்வது மிக சுலபம் என்பது போல அவர் கண்கள் அகண்டு விரிந்தன. வரதனை அவர் பார்த்த பார்வை அவனை துளையிட்டது. வெளியே



இருந்து பெரிய அளவில் ஏதோ ஒருவித மின்சாரம் அவனுக்குள் ஊடுருவுகிற மாதிரி இருந்தது.

சில நொடிகள்தான்...

அப்படியே தாத்தாவை வெறித்தான்.

'உண்மையை பேச வரதா. எதையும் மறைக்காம என்கிட்ட பேசு!' - தாத்தா நீவித்தருவது போல கேட்டார்.

அவனும் கொட்ட ஆரம்பித்து விட்டான்.

***

ஆகஸ்ட் பதினைந்து.

அந்த பள்ளிக்கூட கலையரங்க வளாகம் ஆயிரக்கணக்கான மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் அல்லோல கல்லோலமாக இருந்தது.

மேடை காலியாக தயார் நிலையில் மந்திரிக்காக காத்திருக்க, அங்கங்கே அவரை வரவேற்கும் பேனர்கள். ராமு ஒரு வயதான சுதந்திரப் போராட்ட தியாகியின் வேடத்தில் கையில் மாலையோடு வளாகத்து நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொடிருந்தான்.

'மந்திரி வந்த உடனே அவருக்கு நீ போய் மாலை போடறே... நீ மாலை போடப்போறது புரொக்ராம் அஜெண்டாவுல இருக்கு. மேடைக்கு நீ போய் மாலை போடணும். அப்ப நடக்கக் கூடாதது எல்லாம் நடக்கும்.'

-என்று சிரஞ்ஜீவி அவன் மூளையை சலவை செய்து தயார் படுத்தி அனுப்பியிருந் தான். சிரஞ்ஜீவியின் குரலைத் தவிர மற்ற

எல்லாமே ராமு வரையில் வெட்டிச் சப்தம்தான். அப்படி ஒரு கட்டுப்பாட்டில் இருந்தது அவன் மனது.

ரிமோட் சிரஞ்ஜீவியின் கையில் இருந்தது.

சிரஞ்ஜீவியோ அந்த வளாகத்தை ஒட்டிய மாடி வீடு ஒன்றின் தனி அறையில் ஜன்னல் வழியாக கிட்டத்தட்ட இருநூறு மீட்டர் தொலைவில் உள்ள வளாகத்தை பார்க்க முடிந்தவனாக இருந்தான். கூடவே வரதனும் இருந்தான்.

வரதனும் உறைந்து இறுக்கமான நிலை.

"என்ன வரதா பயப்படறியா- அதான் ஒரு வார்த்தை கூட பேசாம இருக்கியா?" என்று நடுநடுவே கேட்கும்போது வரதனிடம் பதில் இல்லை.

விலாவரியாக விசாரிக்கலாம் என்றால் அதற்குள் மந்திரி வரும் அரவம் கேட்டது.

சைரன் ஜீப்பின் சப்தம்.

புழுதிக்கவளங்கள்...தொடர்ச்சியாக கார்களின் ஊடுருவல் சப்தங்கள்.

ஜன்னல் வழியே பார்த்தான்.

மந்திரி வந்து விட்டார். வந்தவர் வரவேற்கப்படுகிறார். மாலை போடப்படுகிறது. மேடை ஏறுகிறார்.

போலீஸ் வளையத்திற்கு நடுவில் மேடை ஏறி அமருகிறார்.

வரவேற்புரை வாசிக்க வருகிறார் ஒருவர்.

பலே..!

அவருக்கு பிறகு தலைமையுரை... ஒரு நடு



வயதுப் பெண்மணி ஆயிரம் முறைக்கு மேல் உதட்டை நக்கியபடி பேசி முடித்து விட்டு அமர்கிறாள்.

அதன்பின் மந்திரிக்கு மரியாதை செய்யப் படுகிறது.

மைக்கில் அவருக்கு மாலை அணிவிக்க உள்ளவர்கள் பட்டியல் வாசிக்கப்படுகிறது.

அதில் முதல் பெயரே தியாகி சபேசன் பெயர்தான். அந்த பெயர் வாசிக்கப்பட்டவுடன் ராமு எழுந்தான். மேடை நோக்கி நடந்தான்.

மாடி வீட்டு தனி அறையில் சிரஞ்ஜீவியும் ரிமோட்டுடன் தயாரானான். வரதன் சிரஞ்ஜீவியை ஒட்டி நின்று கொண்டான்.

ராமு மாலை அணிவிக்கும்போது கச்சிதமாக ரிமோட் பட்டனை அழுத்திற்று சிரஞ்ஜீவியின் கை.

அடுத்தநொடி காதைப் பிளக்கும் சப்தம் கேட்டது.

கலையரங்க வளாகத்தில் இருந்து மந்திரி பார்க்கும் தூரத்தில் சிரஞ்ஜீவியும் வரதனும் இருந்த அந்த மாடி அறைப்பகுதியே கரும்புகை சூழ ஒரே புகைக் கொட்டாரமாக இருந்தது.

செக்யூரிட்டியினர் மந்திரியை சுற்றி வளைத்துக் கொண்டனர். அவரை அங்கிருந்து அப்புறப்படுத்த ஆரம்பித்தனர். கூட்டமும் மிரண்டு போய் பார்த்தபடி இருந்தது.

ராமு சலனமே இல்லாமல் மேடையை விட்டு இறங்கினான். கருப்பசாமி தாத்தா காத்திருந்தவர் போல வந்தார்.

"வா ராமு- நாம வீட்டுக்குப் போகலாம்."

—என்று நடக்க ஆரம்பித்தார்.

வரதனை அன்று மனோவசியம் செய்து உண்மையைச் சொல்லச் சொன்னபோது அவன் ராமுவை 'ஹியூமன் பாம்'ஆக முடிவு செய்திருப்பதாக கூறியதைத் தொடர்ந்து அவன் பாம் இல்லை - நீதான் பாம் என்று கூறியதும் அதற்கேற்ப தாத்தாவின் கட்டளைப் படி அவன் சிரஞ்ஜீவி கொடுத்து வெடி குண்டை தன் இடுப்பில் யாருக்கும் தெரியாத படி கட்டிக் கொண்டு அவனோடு கூடவே இருந்ததையும், அப்படி இருக்க வேண்டும் என்று சொன்னதையும் எண்ணிப் பார்த்த படியே நடந்தார் தாத்தா.

மௌனமாக எந்த அதிர்வுமின்றி பின் தொடர்ந்து கொண்டிருந்தான் ராமு.

இனி அவன்தான் அவரது சிஷ்யன்.

அவனது கண்களும் காலப்போக்கில் அனைத்தையும் சாதிக்கும் கருப்பசாமி தாத்தாவின் மாயக்கண்கள் போல மாறுமோ? மாறும் இது நிஜம்!

**முற்றும்**

**சிரிப்பு...**

"அந்த நியூமராலஜிஸ்ட் போலி யானவர்னு எப்படிச் சொல்றே?"

"'ஷேவாக்'னு பேர் வச்சிருக்கற தாலதான் அவரால நிறைய ரன் எடுக்க முடியதில்லை... 'ஷேரன்'னு பேரை மாத்தி வச்சா எடுக்கலாம்னு சொல்றாரே..."